# அயல நாடுகளில் கடன் ஒழிப்பு



J. Arumugam.
30-3-38

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM

# அயல் நாடுகளில்
# கடன் தொல்லை ஒழிப்பு

ஆசிரியர் :

A. முத்தையா, M. A.,

பொருளாதார உதவிப் பேராசிரியர்,

(Assistant Professor of Economics)

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

❋

தேசீய வித்யா சங்கம்,

சென்னை.

பதிப்புரிமை] 1938 [விலை அணா 12

# முகவுரை

சமீப காலத்திலே அநேகமாக எல்லா நாடுகளிலும் விவசாயிகளின் கடன் தொல்லை அதிகமாய் இருந்தது. விவசாயிகளைக் கடனிலிருந்து விடுவித்தல் சிறந்த தேசோத்தாரண வேலையெனப் பல நாடுகளில் எண்ணப்பட்டது. ஆகையால், அந் நாடுகளில் கடன் நிவாரணத்திற்காகப் பல முறைகள் கையாளப்பட்டன. நமது நாட்டில் இப்போது பல மாகாணங்களிலும் கடன் தொல்லை ஒழிப்பு முயற்சி நடைபெறுவதால், பிற நாட்டினர் அநுஷ்டித்த முறைகள், அவர்களுடைய அநுபவங்கள் முதலியவைகளை விவரமாக அறிந்துகொள்ளல் விசேஷ நன்மையைத் தரும். அவைகளெல்லாம் இந் நூலில் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இச்சிறு நூல், விவசாயிகளின் கடன் பிரச்சினையைப்பற்றி உண்மையான அறிவு பெற விரும்பும் தமிழருக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்குமென நம்புகிறேன்.

வெளி நாட்டுக் கடன் நிவாரண முறைகளைப் பற்றிய விவரங்கள் திரு. G. கொஸ்டான்ஜோ

(**Mr. G. Costanzo**) என்பவர் "**International Review of Agriculture**" என்ற மாத வெளியீட்டில் எழுதியதை ஆதாரமாகக்கொண்டு எழுதப் பட்டவையாகும். அந்தச் சிறந்த ஆசிரியருக்கு என் நன்றி உரியதாகுக.

"குரு விலாசம்"
சிங்கார முதலியார் தெரு,
தியாகராய நகர், சென்னை.
22—1—'38

அ. முத்தையா

## உரிமையுரை

விவசாயிகளிடம் மிக்க அநுதாபம் காட்டுபவரும்,
பரம்பரை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரும்,
பல தேச மக்களின் நிலையையும்
நேரில் கண்டறிந்தவரும்,
சென்னை மாகாண அரசாங்க விளம்பர
மந்திரியாரும் ஆன

**கனம் திரு. S. இராமநாதன்**

அவர்களுக்கு
இந்நூல் உரிமையாக்கப்பட்டது.

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. விவசாயிகளின் கடன் தன்மை | .... | 1 |
| 2. திடீரென விவசாயிகளின் கடன் பளு எப்படி அதிகமாயிற்று ? | .... | 15 |
| 3. பல நாட்டு அரசாங்க வேலைகளின் அடிப்படையான தத்துவங்கள் | .... | 26 |
| 4. ஒவ்வொரு தேசத்திலும் முக்கியமாக என்ன என்ன சட்டங்கள் செய்திருக்கிறார்கள் ? | .... | 31 |
| 1. ஜெர்மனி .... | .... | 31 |
| 2. பிரான்ஸ் .... | .... | 32 |
| 3. இத்தாலி .... | .... | 38 |
| 4. ஸ்விட்ஜர்லாந்து .... | .... | 40 |
| 5. டென்மார்க்கு .... | .... | 46 |
| 6. நார்வே .... | .... | 51 |
| 7. ஸ்வீடன் .... | .... | 52 |
| 8. பின்லாந்து .... | .... | 53 |
| 9. ஜப்பான் .... | .... | 55 |
| 10. கனடா .... | .... | 57 |
| 11. அமெரிக்க ஐக்கிய நாடுகள் | .... | 59 |
| 12. பல்கேரியா .... | .... | 62 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 13. | கிரீஸ் .... .... | 66 |
| 14. | ஹங்கேரி .... .... | 67 |
| 15. | போலந்து .... .... | 72 |
| 16. | ருமேனியா .... .... | 76 |
| 17. | சூகோஸ்லோவகியா .... | 81 |
| 18. | யூகோசிலேவியா .... .... | 83 |
| 19. | எஸ்டோனியா .... .... | 86 |
| 20. | லேட்வியா .... .... | 88 |
| 21. | லிதுயேனியா .... .... | 89 |
| 5. | இந்தியாவில் இதுவரையிலும் செய்யப்.... பட்ட வேலை .... .... | 91 |
| 6. | முடிவுரை .... .... | 99 |

# அயல் நாடுகளில் கடன் தொல்லை ஒழிப்பு

THE MADURA TAMIL SANGAM

## 1. விவசாயிகளின் கடன் தன்மை

ஆலைத் தொழில்களில் மிகச்சிறந்த நாடுகளில்கூட விவசாயமானது இப்போது ஒரு முக்கிய தொழிலாக எண்ணப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்திலும், அந்திய காலத்திலும் பல நாடுகளிலும் ஆலைத்தொழில்கள் வளர ஆரம்பித்தன. மக்களின் கவனம் முழுவதையும் ஆலைத்தொழில்களே கவர்வனவாயின. ஆலைத் தொழில்களில் ஏராளமான இலாபமும் கிடைத்தது. அக்காரணத்தால், மக்களுக்கு ஆலைத் தொழில் மேல் விசேஷ மோகம் உண்டாயிற்று. மக்கள் ஆலைத் தொழில்களிலே அதிகமாக ஈடுபட ஆரம்பித்தனர். அந்த நாட்டு அரசாங்கங்களும் ஆலைத் தொழில்களின் மேல் விசேஷமான பக்ஷத்தைக் காட்டின. இங்கிலாந்து முதலிய தேசங்கள் விவசாயத்தை அதிகமாகப் பொருட்படுத்தாது, ஆலைத் தொழிலையே அபரிமிதமாகப் பெருக்கி வந்தன. இங்கிலாந்து தனக்கு வேண்டிய உணவுப் பொருள்கள்,

மூலப் பொருள்கள் **(Raw materials)** இவை களிற் பெரும்பகுதியை வெளிநாடுகளிலிருந்தே பெறுவதாயிற்று. விவசாயத்தின் பெருமை குன்றி வருவதாயிற்று.

ஆனல், கடந்த மகா யுத்தத்தின்போது தான் அநேக நாடுகள் கண் விழித்துப் பார்க்க ஆரம்பித்தன. யுத்தம் நடந்தபோது, உணவுப் பொருள்களுக்கு அந்நியநாட்டை நம்பி இருந்த நாடுகளில் பல, உணவுப் பொருள்களைப் பெற முடியாது பெரிதும் கஷ்டப்பட்டன. ஒரு நாட்டிற்கு விவசாயமானது பெரிதும் அவசியமான தென்பதைப் பல நாட்டினர் அப்போதுதான் உணர்ந்தனர். தேசத்தின் பாதுகாப்புக்கும், யுத்த காலத்தில் ஒரு தேசமானது கஷ்டங்களிடையே சமாளித்துக் கொள்ளுவதற்கும், ஒவ்வொரு தேசமும் விவசாயத்தை விருத்திசெய்ய வேண்டுமென்ற ஒருதீவிர எண்ணம் ஒவ்வொரு நாட்டிலும் பரவலாயிற்று. மகா யுத்தத்திற்கு முன்பு இருந்த சில அடிப்படையான பொருளாதாரக் கருத்துகளுக்கும், யுத்தத்திற்குப்பின் உலவும் சில பொருளாதார நுட்பங்கட்கும் இடையே பல வேறுபாடுகள் இருக்கின்றன.

யுத்தத்திற்கு முன்பு, பல பொருளாதார நிபுணர்கள் கூறியதன் சாரம் இங்குக் கவனிக்கற்பாலது: ஒரு நாடு மிகவும் முன்னேற்றமடைய வேண்டுமானல், அந்த நாடு எல்லாத் தொழில்களையும் செய்ய வேண்டுவதில்லை ; எல்

லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்ய வேண்டுவதில்லை. ஒவ்வொரு நாட்டிலும் சிறப்பான, அந்த நாட்டிலே அன்றி வேறு நாடுகளில் காணப்படாத, இயற்கை வசதிகள் உண்டு. உதாரணமாகக் குளிர்ந்த சீத நிலை, வெப்ப நிலை, நீர் வளம், நில வளம், மக்களின் பழக்க வழக்கங்கள், உடல் திறன், செயல் திறன் முதலியவைகளிலும் ஒரு நாட்டிலுள்ளவைகளுக்கும், ஏனைய நாடுகளிலுள்ளவைகளுக்கும் வித்தியாசங்கள் பல இருக்கலாம். ஆதலால், சில நாடுகள் சில பண்டங்களை உற்பத்தி செய்வதில் சிறந்தவையாய் இருக்கும்; வேறு சில நாடுகள் வேறு பண்டங்களை உண்டாக்குவதில் மேம்பட்டு நிற்கும். ஆகையால், எந்தெந்த நாடுகள் எந்தெந்தப் பண்டங்களை உண்டாக்குவதில் விசேஷ சௌகரியங்களைப் பெற்றிருக்கின்றனவோ, அந்தந்த நாடுகள் அந்தந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வதுதான் சிறந்தது; இலாபகரமானது. ஒரு நாடு, தனக்குள்ள விசேஷ வசதியால் சில பண்டங்களை உண்டாக்கி, அவைகளைப் பிற தேசங்களுக்கு அனுப்பி, அப்பண்டங்களுக்குப் பதில், அந்த நாடுகளில் எவை விசேஷமாக உண்டாகின்றனவோ அவைகளைப் பெற்றுக்கொள்ளுவதுதான் மிகவும் மேன்மையானது. அதைவிட்டு ஒவ்வொரு நாடும் எல்லாப் பண்டங்களையும் உண்டாக்குவதென்பது அறிவில்லாத காரி

யம். யுத்தத்திற்கு முன் தொழில் துறை, வியாபாரம் முதலிய அனைத்தும் இக் கருத்துக்களையே அடிப்படையாகக்கொண்டு நின்றன.

ஆனால், யுத்தத்திற்குப்பின் பல நாட்டினரின் பொருளாதாரக் கொள்கை பெரிதும் மாறிவிட்டது. ஒவ்வொரு தேசமும் தனக்கு வேண்டிய பொருள்களையெல்லாம், அதற்கான வசதிகள் இருந்தாலும் சரி, இல்லாமற் போனாலும் சரி, தானே உண்டாக்க வேண்டுமென்ற பேராசையைக் கைக்கொண்டது ; எந்தப் பொருளுக்கும் பிற தேசத்தை நம்பி இருக்கக் கூடாது என்ற உணர்ச்சி உண்டாயிற்று. ஒவ்வொரு தேசமும் எல்லாப் பொருள்களையும், தானே உண்டாக்க வேண்டுமென முயலும் போது, சில பொருள்களை மலிவான விலைக்குச்செய்ய முடியும் ; சில பொருள்களை அதிகமான விலைக்கே செய்ய முடியும். ஆனால் அவைகளை வெளிநாட்டிலிருந்து குறைந்த விலைக்கு வாங்கக்கூடும். ஒவ்வொரு தேசமும், ' குறைந்த விலைக்குக் கிடைத்தாலும் சரி, வெளி நாட்டிலிருந்து வாங்கக் கூடாது; வெளிநாட்டுச் சரக்குகளுக்குக் கடு வரி விதித்து இறக்குமதியைத் தடுக்க வேண்டும்; அதிக அடக்கம் (Cost) ஆனாலும் அப்பொருள்களைத் தானே செய்யவேண்டும்,' என்ற ஒரு கொள்கையையே பிரதானமாகக் கொண்டது. இக்கொள்கைக்கு 'பொரு

ளாதாரத் தேசியம்' (Economic nationalism) என்பது பெயர்.

இக்கொள்கையின் காரணமாக, எல்லா தேசங்களும் விவசாயத்தைப் பெரிதும் கவனிக்க முன் வந்துள்ளன. விவசாயத்திற்கு அநேக தேசங்களில் விசேஷப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. விவசாயிகளின் எண்ணிக்கையைப் பெருக்க ஒவ்வொரு தேசமும், பல முறைகளையும் கையாளுகின்றது. காடு வெட்டிப் பயிரிடப்படுகிறது. சதுப்பு நிலங்கள் சாகுபடிக்கேற்றனவாகும்படி பண்படுத்தப்படுகின்றன. கடனில் முழுகிய பெரிய பண்ணைகளை (Estates), சில நாடுகளில் அரசாங்கமே வாங்கி, சிறு பகுதிகளாகப் பிரித்து, நிலமில்லா உழவர்கட்குக் கொடுத்து, அவர்களிடமிருந்து நிலக்கிரயத்தைச் சிறிது சிறிதாகப் பல வருஷங்களில் திரும்பப்பெற்றுக்கொள்ளுகிறது. விவசாயத்திற்கு அவசியமான கடனைக் கொடுப்பதற்கான ஸ்தாபனங்களையும், வசதிகளையும், அவ்வரசாங்கங்கள் பெருக்கி உள்ளன.

மனிதர் வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்யும் தொழிலில் ஒன்றாக விவசாயம் இப்போது எண்ணப்படவில்லை. தேசத்தின் சீருக்கும் சிறப்புக்கும் விவசாயமானது மிக அவசியமானதென்பது, பல நாடுகளிலும் இப்போது ஒப்புக்கொள்ளப்படுகிறது. சமூகத்திற்கு விவசாயிகளே அச்சாணிகள் என்ற

உண்மை இப்போது அங்கே நிலைநிற்கின்றது. இந்தக் கொள்கைதான் நமது நாட்டிலே, பண்டைக்காலம் முதல், மிகத்தலையாய கொள்கை எனப் புகழப்பட்டதாகும். இக்கொள்கை 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃது ஆற்ருது, எழுவாரை எல்லாம் பொறுத்து' என்ற பொய்யா மொழியில் அடங்கி யிருக்கிறது. அதாவது, "உழுதல் தொழிலில் சிறந்த திறமையை உடையவர், அவ்வுழவுத் தொழிலைச் செய்ய மாட்டாமல் பிற தொழில்களை விரும்பி, அவற்றைச் செய்யத் தொடங்குவார் அனைவருக்கும் உதவி செய்து, அவரைத் தாங்குதலால், உலகத்தோராகிய தேருக்கு அச்சாணியைப்போல்பவர் ஆவார்," என்பதாம். அமெரிக்க வியாபாரிகளின் விசாரணைக் கமிஷன் கூறும் கருத்து, இவ்வுண்மையை வற்புறுத்துகிறது. அக்கமிஷன் கூறுவதாவது, "விவசாயமென்பது, சில பயிர்களைச் சாகுபடிசெய்து அவ்விளை பொருள்களை விற்றுப் பணம் சம்பாதிக்கும் வழி என்று மாத்திரம் எண்ணக்கூடாது. அது ஒரு கைத்தொழிலோ வியாபாரமோ மாத்திரம் அன்று; நிலங்களை நன்ருகக் காத்து, நல்ல பயன் தருவனவாகச்செய்து, நல்ல பண்டங்களை உற்பத்தி செய்வதாகியதேசியகாரியத்தை, சேவையை, தனிப்பட்ட சிலர் தேசத்துக்காகச் செய்வதே விவசாயமென்ற தொழிலாகும். விவசாயிகள், தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்

கும், சொந்த இலாபம் அடைவதற்கும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தாலும், உண்மையில் அதே சமயத்தில், தேச வாழ்க்கையின் அடிப்படையைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால், விவசாயமானது அரசாங்கத்தின் தெளிவான, சந்தேகமற்ற ஆதரவுக்கு அருகதையானது. விரிந்த, நீண்ட கால, ஆழ்ந்த யோசனையாலுண்டான பல முறைகளைக் கொண்டு போற்றுவதற்கான ஒருதொழில் விவசாயமே. விவசாயத்தைப்பற்றி அரசாங்கமானது கையாளும் முறைகளைக் கேவலம், சிறு வகுப்பினருக்கோ, சமூகத்தின் ஒரு பகுதியினருக்கோ, சிலருடைய பணச்சௌகரியத்துக்கோ செய்யும் காரியங்களென எண்ணவே கூடாது. விவசாயத்தின் நன்மைக்காகச் செய்யும் காரியங்கள் தேசப் பாதுகாப்புக்காக, சகல மக்களுடைய சுபிட்சத்துக்காக அல்லது க்ஷேமத்துக்காக, சமூகத்தின் வலுவுக்காக, அரசியலின் பாதுகாப்புக்காகச் செய்யும் காரியங்களாகத்தான் எண்ணப்பட வேண்டும்,'' என்பதாம்.

இக்காரணத்தை உணர்பவர்கள் விவசாயிகளுக்கு விசேஷ சலுகை காட்டப்படுவதைப் பற்றி வருத்தப்பட மாட்டார்கள் ; அஞ்ச மாட்டார்கள்; மருள மாட்டார்கள்; அந்த விசேஷப் பாதுகாப்பைப் பாராட்டுவார்கள்; அவசியத்தை உய்த்து உணர்வார்கள்; அக்காரியத்தைச் செய்யும் அரசாங்கத்தைப் பெரிதும் பாராட்டு

வார்கள். சிறு பான்மையான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மேல் நாடுகளிலேயே அரசாங்கம் விவசாயிகள் விஷயத்தில் அவ்வளவு அக்கறையைக் காட்டினல், ஒன்றுக்கு முக்கால் வாசியான ஜனங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் நமது தேசத்தில் விவசாயமானது அரசாங்கத்தாரால் விசேஷமாகப் பாதுகாக்கப்படவேண்டும் என்பதைச் சொல்லாமலே அறிந்துகொள்ளலாம்.

எந்தத் தொழிலை நடத்த வேண்டுமானலும் முதல் வேண்டுவது அவசியம். ஒவ்வொருவனும் தன் தொழிலுக்கு வேண்டிய முதல் அவ்வளவையும் தன் கையிலிருந்தே போடுவதென்பது சாத்தியமான காரியமல்ல. தொழில் நடத்தும் போது, ஒரு குறுகிய காலத்துக்கோ **(Short term)**, அல்லது நீண்ட காலத்துக்கோ **(Long term)** கடன் வாங்குவதென்பது அநேகமாக எல்லாத் தொழிலிலும் உள்ள ஒரு நிலைமை. ஆலைத்தொழில்களிலும், வியாபாரத்திலும் அந்த முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

வியாபாரிகளும், தொழில் முதலாளிகளும், குறுகிய காலக் கடனைக் கொண்டால், அக்கடனைச் சில நாட்கள் அல்லது மிகச் சில மாதங்கள், இந்தத் தவணையில் திருப்பிக் கொடுக்க முடியும்; கையிலுள்ள சரக்குகளை அடைமானமாகக் காட்ட முடியும். அச்சரக்குகளின் விலை

யையும் கடன் கொடுப்பவர் எளிதில் மதிப்பிட முடியும். நீண்ட காலக் கடன் வேண்டுமானுல், பங்குகளை (**Shares**) விற்றும், அடைமானச் சீட்டுகளை விற்றும் எளிதில் பணத்தைப் பெற லாம். மேலும், வியாபாரமும், ஆலைத் தொழிலும் கூட்டுக் கம்பெனிகளாலேயே நடைபெறு கின்றன. ஆகையால், அவை பலருடைய பொறுப்பில் இருப்பன. அந்த ஒரு சௌகரியத்தாலும், அவை வேண்டும்போது வேண்டிய தொகையை எளிதில் பெறுகின்றன.

விவசாயமோ, அப்படிப்பட்டதல்ல. விவசாயிக்குக் குறுகின காலக்கடன் என்பது குறைந்தது ஒரு வருஷத்துக்கு வேண்டிய கடன். கடன் வாங்கிய அந்த வருஷத்தில் சாகுபடி விளைவு முதலியவை சரியாக இருந்தால்தான், அந்த வருஷமே அந்தக் கடனைக் கொடுத்து அடைக்க முடியும். இல்லாவிட்டால், அடுத்த வருஷத்திலேதான் கொடுக்க முடியும். நமது தேசத்தில் மாத்திரம் அன்றி, எல்லாத் தேசங்களிலும் விவசாயமானது இயற்கையின் போக்கைப் பொறுத்தது. இயற்கை (மழை, தண்ணீர், புயலின்மை) செம்மையாக இருந்தால், விவசாயி தன் உழைப்பின் பயனைப் பெறலாம். இயற்கைக் கோளாறு ஏற்பட்டால் (காலமழை இன்மை, அதிவிருஷ்டி, அநாவிருஷ்டி, புயற்காற்று, அதிக பனி வீழ்ச்சி முதலியவை) பயிர் நாசமாகிவிடும். விவ

சாயிக்கு ஒன்றுங் கிடைக்காது. விவசாயத்தின் தன்மை இப்படி இருப்பதால், விவசாயி கடன் வாங்குகையில், தக்க அடைமானம் அல்லது பண்டச்சாட்டு முதலியவைகளைக் கொடுக்க முடிவதில்லை. கம்பெனிகள், பங்கு விற்பனை முதலிய வழிகளால் பணம் திரட்டுவதுபோல விவசாயி செய்வதற்கில்லை. ஏனென்றால், விவசாயி தனிப்பட்ட மனிதன்.

புது நிலத்தை வாங்கவோ, அல்லது சாசுவதமாக அதைச் செம்மைப்படுத்தவோ விவசாயி நீண்ட காலக்கடனைப் பெறுகிறான். பெரும்பாலும் நிலத்தை அடைமானமாக வைத்துத்தான், விவசாயி நீண்ட காலக் கடனைப் பெற முடியும்.

மேலே கூறியபடி விவசாயிகளின் கடன் இரண்டு வகைப்படும் : (1) குறுகிய காலக்கடன், (2) நீண்ட காலக் கடன்.

(1) குறுகிய காலக் கடன் பொரும்பாலும் சாகுபடிச் செலவுக்காகவே வாங்கப்படுவது. மாடுகளை வாங்கல்; உழவுக் கருவிகளை வாங்கல் அல்லது வாடகைக்குப் பெறுதல்; விதை எரு முதலியவைகளை வாங்கல், நாற்று நடல்,களை எடுத்தல், அறுவடை செய்தல் முதலிய செலவுகள் செய்தல்; விவசாயியும் அவன் குடும்பத்தாரும் சாப்பாட்டுக்காக வாங்கல், ஆடு மாடுகளின் போஷணைக்காக வாங்கல், வேலி போடல், வாய்க்கால் வெட்டல், ஏற்றம் போடல்

முதலிய சீர்த்திருத்தங்களுக்காக வாங்கல் முதலியவை எல்லாம் குறுகிய காலக் கடன் எனப்படும்.

(2) நீண்ட காலக் கடன் என்பது, நிலம் வாங்குவதற்காகவும், நிலச் செம்மைப்பாட்டிற்காகவும், விலையதிகமான கருவி முதலியவைகளை உபயோகப்படுத்துவதற்காகவும், பல நீண்ட நாள் பிரயோசனமான மராமத்துகள் செய்யவும் வாங்கும் கடனாகும்.

இவைகளையல்லாமல், விளை பொருள்களை விற்பனை செய்வது சம்பந்தமாகவும், சிறு கைத்தொழில்களைச் செய்யும் நிமித்தமாகவும் கடன் வாங்க நேரிடுவதும் உண்டு.

மகா யுத்தத்தின் போதும், யுத்தத்தை அடுத்த சில வருஷங்களிலும் விளை பொருள்களின் விலை உயர்ந்து நின்றது. எல்லாப் பொருள்களின் விலையும் அதிகமாகவே இருந்தது. அப்போது நிலச் சாகுபடியானது விசேஷ இலாபகரமானதாய் இருந்தது. நில விலையும் அதிகமாகிக்கொண்டே வந்தது. விவசாயிகளின் கையில் பணம் அதிகமாகப் புழங்க ஆரம்பித்தது. விவசாயத்தை மேலும் மேலும் விருத்தி செய்வது இலாபத்தையே தந்தது. விவசாயத்தை மேலும் மேலும் விருத்தி செய்தற்குப் பணம் வேண்டி இருந்தது. அந்த முடை ஏற்பட்டபோது பல விவசாயிகள் கடன் வாங்கினார்கள்; அதிக வட்டி கொடுக்கவும் உடன்பட்

டார்கள். அதிக வட்டிக்கு வாங்கிய பணத்தை விவசாயத்துக்கு உபயோகப்படுத்தினால், அதுவும் விசேஷ இலாபத்தைக் கொடுத்தது. விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்றபடியால், விவசாயிகளுக்கு நல்ல தெம்பு இருந்தது. விவசாயிகள் சாகுபடிக்கான செலவுக்காக மாத்திரம் அன்றி, அதிக விலையில் புதிது புதிதாக, மேலும் மேலும் நிலம் வாங்குவதற்காகவும் கடன் வாங்கினார்கள். அநியாயமான அதிக விலைக்கு நிலங்களை வாங்கினார்கள்; வாங்கிய நிலங்களை அடைமானம் வைத்தார்கள். விளை பொருள்களின் விலை அதிகமாக இருந்தபடியால், அந்த இலாபத்தைக்கொண்டு கடனை அடைத்துவிட முடியும் என எண்ணமிட்டார்கள். அப்படி அவர்கள் செய்திருக்கவும் கூடும். ஆனால் பெரும்பாலும் 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது.' விலைவாசி ஒரே அடியாக, தொப்பென்று கீழே விழுந்துவிட்டது. நில விலையும் குறைந்துவிட்டது. வாங்கிய கடனுக்கு வட்டி கொடுப்பதும் மிகக் கஷ்டமான காரியமாகிவிட்டது. எனவே, விவசாயிகளின் பாடு திண்டாட்டமாகிவிட்டது.

மேலே கூறியுள்ளபடி விவசாயி மிக எளிதாகக் கடன் வாங்க முடிவதில்லை. அநேகமாக எல்லாத் தேசத்திலும் விவசாயி, ஆலை முதலாளிகள் முதலியவர்களைவிட அதிகமான வட்டி கொடுக்க வேண்டி இருக்கிறது. அதிலும் யுத்

தத்துக்கு அடுத்த சில வருஷங்களில் விவசாயிகள் அதிக வட்டிக்குப் பணம் வாங்கினார்கள். பொருள்களின் விலை வீழ்ச்சி வந்ததும் அந்த விவசாயிகளின் நிலைமை மோசமாகிவிட்டது.

நமது தேசத்தில் மாத்திரமன்றி, அநேகமாக எல்லாத் தேசத்திலும் விலைவாசி உயர்ந்திருந்த அந்தக் காலங்களிலே, விவசாயிகள் கடன் வாங்கிய பணத்தைக்கொண்டு நிலம் வாங்கினார்களென்பது கீழ்க்காணும் குறிப்பால் அறியக் கிடக்கிறது.

| | கடன் காரணம் | நூற்றுக்குச் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | நிலம் வாங்க | 64·38 |
| 2. | நிலம் செப்பனிடுவதற்காக | 4·53 |
| 3. | 1, 2 இரண்டின் காரணமாக | 5·31 |
| 4. | வேறு தொழிலுக்காக | 1·95 |
| 5. | உழவுக் கருவிகள், மாடுகள் வாங்க | 1·19 |
| 6. | மேலுள்ள பல ஒன்று சேர்ந்த காரணத்துக்கு | 17·01 |
| 7. | பண்ணை, குடும்பச் செலவுக்காக | 2·83 |
| 8. | இதிலடங்காத இதர செலவுக்காக | 2·80 |
| | ஆக | 100·0 |

இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்ட பெந்தகக் கடன்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. இதிலிருந்து பெரும்பாலான பெந்

தகக் கடன் எப்படி உண்டாயிற்றென்பது உணரத்தக்கது.

இப்படிப் பலவாறாக வாங்கப்பட்ட கடன் தொகைகளின் சுமையும், வட்டியின் சுமையும் அதிக பளுவாகிவிட்டன. அதற்குக் காரணம் விளை பொருள்களின் விலை மிகவும் குறைந்து போனதேயாகும்.

விளை பொருள்களின் விலை வீழ்ச்சி கடன் பளுவை எப்படி அதிகமாக்கியது என்பதை மேலே விளக்குவாம்:

## 2. திடீரென விவசாயிகளின் கடன் பளு எப்படி அதிகமாயிற்று ?

சில வருஷங்களாக விவசாயிகளின் கடன் பளுவானது மிக அதிகமாகிவிட்டது. அதற்குக் காரணம் விலைவாசி மிகவும் குறைந்துவிட்டதே யாகும்.

சாதாரணமாகச் சாமான்களின் விலை அதிகமாவதையும், குறைந்து போவதையும் எல்லா ஜனங்களும் அறிவார்கள். சாமான் களின் மதிப்பு அடிக்கடி மாறுவதைப்போலப் பணத்தின் (ரூபாய், சவரன்) மதிப்பும் அடிக் கடி மாறக்கூடும் என்பதைப் பலர் அறியார். அதிலும், காகித நாணயமானது (Currency note) வெளியிடப்படும் இந்தக் காலத்திலே, கவர்ன்மெண்டார் காகித நாணயத்தின் மதிப்பை வேண்டுமானால் அதிகமாக்கலாம்; அல்லாவிட்டால் குறைக்கலாம்.

இதை இன்னும் விளக்குவோம்: ஒரு தீவிலே 100 சாமான்கள் இருப்பதாக வைத் துக்கொள்ளுவோம். அந்த ஊரில் ஜனங்க ளிடத்தில் மொத்தம் நூறு ரூபாயே இருப்ப தாக வைத்துக்கொள்வோம். அந்த நூறு ரூபாயையும் சாமான்கள் வாங்குவதற்கும் விற் பதற்கும் உபயோகப்படுத்துவதாக வைத்துக் கொண்டால், 100சாமான்களுக்கு நூறு ரூபாய்

ஆனால், சாமான் ஒன்று ஒரு ரூபாய்க்கு விற்கும் அல்லவா?

அதே தீவில் ஒருநாள் திடீரென 100 ரூபாயும் இரட்டிப்பாய்விட்டன என்று வைத்துக் கொள்வோம். ஆகவே, ரூபாய்கள் 200 ம் சாமான்கள் மாத்திரம் 100 ம் இருக்கின்றன என எண்ணிக்கொள்ளுவோம். அந்த இருநூறு ரூபாயையும் 100 சாமான்களையும் வாங்க விற்கஉபயோகப்படுத்துவார்களானால், சாமான் ஒன்றின் விலை 2 ரூபாய் ஆகிவிடுமல்லவா?

இதிலிருந்து என்ன புலனாகிறது? முதலில் ஒரு ரூபாய்க்கு ஒரு சாமான் வாங்க முடிந்தது. பணம் அதிகமானபோது ஒரு சாமான் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கவில்லை. 2 ரூபாய் கொடுக்க நேரிட்டுவிட்டது. அதாவது முதலில் ஒரு ரூபாய்க்கு ஒரு சாமானும், பிறகு ஒருரூபாய்க்கு ½ சாமானுந்தான் கிடைக்கின்றன அல்லவா? அதாவது, ஒரு ரூபாய் எல்லாச் சமயங்களிலும் ஒரே அளவான சாமானை வாங்க முடியவில்லை என்பதாம். இதையே சாமான்களின் விலை அதிகமாயிற்று அல்லது குறைந்தது என்று சொல்லுகிறோம். சாமான் விலை அதிகமாயிற்று என்றால், ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது சாமானின் விலை குறைந்து போயிற்று என்றால், ரூபாயின் மதிப்பு அதிகமாய்விட்டது என்பதை அறிய வேண்டும்.

ஒரு மனிதன் ரூபாய்க்கு ஒரு சாமான் கிடைத்தபோது 100 ரூபாய் கடன் வாங்கியதாக வைத்துக்கொள்வோம். அப்போது அந்த 100 ரூபாய்க்கும் 100 சாமான்கள் வாங்கலாம்.

அதே நூறு ரூபாய் அவன் கையிலிருக்கிறது. சாமான் விலை சாமான் ஒன்றுக்கு ½ ரூபாய் ஆகிவிடுவதாக வைத்துக்கொள்வோம். அதே நூறு ரூபாய்க்கு 200 சாமான்கள் வாங்கலாம் அல்லவா? அதிலிருந்து ரூபாயின் மதிப்பு அதிகமாகிவிட்டதென்பது தெரிகிறது. சாமான் விலை குறைவு என்றால், பணத்தின் மதிப்பு அதிகம் என்பதை அறிய வேண்டும்.

100 ரூபாய்க்கு நூறு சாமான் விற்றபோது ஒருவன் கடன் வாங்கினன். நூறு ரூபாய்க்கு 200 சாமான் விற்கிறபோது கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதாவது சாமான்களின் விலை குறைந்தபோது கடனைத் திருப்பிக்கொடுக்கிறுன். முதலில் 100 ரூபாய் கடனைக் கொடுப்பதற்கு 100 சாமான்கள் இருந்தால் போதும். பிறகோ, 100 ரூபாய் கடன் கொடுப்பதற்கு 200 சாமான்கள் வேண்டும். ரூபாய்க் கணக்கில் பார்த்தால், முதலில் கொடுத்தாலும் 100 ரூபாய்தான்; பிறகு கொடுத்தாலும் 100 ரூபாய்தான். ஆனல், சாமான் கணக்கில் பார்த்தால், முதலில் கொடுக்கும்போது 100 ரூபாய் சாமான் கொடுத்தால் போதும். பிறகு கொடுத்தால் 200 சாமான்

கள் கொடுத்தால்தான் அந்த 100 ரூபாய்க் கடன் தீரும். இதற்கு ஓர் உதாரணம் காட்டுவோம் :

ஒரு கலம் நெல் 4 ரூபாய்க்கு விற்கிறதாக வைத்துக்கொள்வோம். அப்போது ஒருவன் 100 ரூபாய் பணம் வாங்குகிறான். அந்த நூறு ரூபாய்க்கு 25 கலம் நெல் வாங்கலாம் ; அப்படி 25 கலம் நெல் வாங்கிச் சாப்பிட்டு விடுகிறான். சில வருஷங்கள் கழித்துக் கடன்காரன் பணத்தைத் திருப்பிக் கேட்கிறான். அப்போது கடன் வாங்கியவன் கையில் நெல்தான் இருக்கிறது. அவன் அதை விற்றுப் பணம் கொடுப்பதென்று தீர்மானிக்கிறான். அப்போது நெல் கலம ஒன்றின் விலை ரூபாய் 2. பழைய நூறு ரூபாய்க் கடனைத் தீர்ப்பதற்கு இப்போது அவன் 50 கலம் நெல்லை விற்றுக் கொடுக்க வேண்டி இருக்கிறது. 25கலம் நெல் வாங்கியது, வட்டிவாசி ஒன்றும் இல்லாதிருந்தும், 50 கலம் நெல் கடனாக மாறிவிட்டதல்லவா? அதற்குக் காரணம் கடன் வாங்கியகாலத்துக்கும் கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலத்துக்கும் மத்தியில் சாமான்களுடைய (நெல்லினுடைய) விலை குறைந்துவிட்டதே ஆகுமல்லவா ?

எனவே, சாமான்களுடைய விலை குறைந்தால், கடன் பளு அதிகமாகி விடுகிறது. ஆகையால், சாமான்களுடைய விலை குறைந்து கொண்டு வருதல், கடன் கொடுத்தவர்களுக்கு

நல்லது; கடன் வாங்கியவர்களுக்குக் கஷ்டம். அதாவது, வாங்கிய கடனுக்கு அதிகமான சாமான் கொடுப்பதால் உண்டாகிற கஷ்டம். அதல்லாமல் சாமான்களுடைய விலை அதிகமாகிக்கொண்டு வந்தால், கடன் கொடுத்தவர்களுக்கு அசௌகரியம்; கடன் வாங்கியவர்களுக்கு இலாபம். ஏனென்றால், வாங்கிய கடனைக் குறைந்த அளவு சாமான்களைக் கொண்டு கொடுத்துத் தீர்த்துவிடலாம்.

கடந்த சில வருஷங்களாகச் சாமான்களின் விலை மிகவும் குறைந்து வந்துவிட்டது. விளை பொருள்களின் விலை இறங்கிவிட்டது. நெல் கலம் 4 ரூபாய்க்கு விற்றது; இப்போது $1\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கிறது. அதனால், பணத்தின் மதிப்பு இப்போது அதிகமாகிவிட்டது என்பது தெரியக்கூடும்.

இந்த விலை வீழ்ச்சியானது இந்தியாவில் மாத்திரமன்று, உலக முழுவதிலுமே இருக்கிறது. இதற்குக் காரணங்கள் பலவாகும். அவைகளைப்பற்றி இங்கே விவரமாகச் சொல்வதற்கில்லை. இப்படி விலை மிகவும் குறைந்திருக்கிற காலத்தை வியாபார மந்தகாலம் என்று சொல்லுவார்கள். அந்த வியாபார மந்தகாலந் தான் இப்போது உலகத்தில் நிகழ்வது.

ஆகையால், முன்பு 1000 ரூபாய்க் கடன் வாங்கி இருந்தால், அது இப்போது 2000 ரூபாய்க் கடனுக்குச் சமமாகும். முன்னே 10

ரூபாய்க் கடன் வாங்கி இருந்தால், அது 20 ரூபாய்க்குச் சமமாகும்.

எனவே, விவசாயிகளின் கடனை து சாமான்களின் விலை ஒன்றுக்குப் பாதி ஆகி விட்டபடியால் (கடன் தொகை) ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஆகிவிட்டது. ரூபாய்க் கணக்கில் பார்த்தால், முன்னேயும் அவ்வளவுதான்; இப்போதும் அவ்வளவுதான். ஆனால், கடன் பளுவைச் சரியாகக் கணக்கிட வேண்டுமானால், சாமான் கணக்கில் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். அப்படிக் கணக்குப் பார்த்தால், கடன் சுமையானது இரட்டித்துவிட்டது என்று கூசாமல் கூறலாம்.

இந்த விஷயம் சாதாரணமாகப் பலருக்குப் புலப்படுவதில்லை. 100 ரூபாய் கடன் வாங்கி, 100 ரூபாய் திருப்பிக் கொடுத்தால், அதே அளவு கொடுத்ததாக எண்ணுவது வழக்கம். ஆனால், சாமான் கணக்கில் பார்த்தால், ஒருவன் கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது ஒன்று, கூட்டிக் கொடுக்கிறான்; அல்லது குறைத்துக் கொடுக்கிறான்.

புரபசர் ஜார்ஜ் ஓப்ரயின் (**Prof. George O'Brien**) என்பவர், விவசாயப் பொருளாதாரம் (**Agricultural Economics**) என்ற நூலில், விலை வீழ்ச்சியால் விவசாயிக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகக்கூடும்என்பதைப்பற்றி எழுதி இருக்கிறார். அது மேல் நாட்டு விவசாயிகளைப்பற்றி

எழுதியது. அது நம் நாட்டு விவசாயிகளுக்கும் அது மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. அதன் சுருக்கம் வருமாறு :—

"விலைவாசி அதிகமாகப் போகும்போது விவசாயிக்கு நன்மை வந்ததென்று பேசுவார் கூட இல்லை. விலை வீழ்ச்சி வந்ததுமோ, விவசாயி அழிந்துவிடுவான் என்ற கூக்குரல் எங்கும் உண்டாகிறது. அதற்குக் காரணம் என்ன? விலை ஏறி விற்கும்போது விவசாயிக்கு விசேஷ இலாபம் கிடைத்ததல்லவா? அந்த இலாபத்தைக்கொண்டு விவசாயி இப்போது சௌகரியமாய் இருக்கலாமல்லவா? அப்படி இருக்க, ஏன் விவசாயிக்குக் கஷ்டம் நஷ்டம் என்று பலர் கூவவேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர்.

"விலை அதிகமாக விற்றபோது விவசாயிக்கு இலாபம் விசேஷமாய்க் கிடைத்ததென்பது உண்மைதான். விலை அதிகமாக விற்கும்போது அவன் விளை பொருளை அதிகமாக உண்டாக்கிக்கொண்டே வருகிறான். விலை வீழ்ச்சியோ, திடீரென வருகிறது; திருட்டுத்தனமாகவும் ஒருவருக்கும் தெரியாமலும் வருகிறது. அதை அறியாத விவசாயி விளை பொருள்களை அதிகமாக விளைவிக்கிறான். அவன் அதிகமாக விளைவிப்பதால், விலை இன்னும் அதிகமாகக் குறைந்து போகிறது. அப்போதுகூட அந்த விவசாயி, 'ஏதோ தற்காலீகமாக விலை குறைந்திருக்கிறது; மறுபடியும்

அதிகமாய்விடும்,' என்று நினைக்கிறான். சில காலத்திற்குப் பிறகுதான் விலை சாசுவதமாக விழுந்துவிட்டதென்பதை அவன் உணருகிறான்.

" விலை உயர்ந்து விற்கும் காலத்தில் விவசாயி அநேக அதிக செலவுகளைச் செய்து பழக்கப்படுத்திக்கொள்ளுகிறான். இப்போது அச் செலவுகளைக் குறைக்க முடியவில்லை. விலை அதிகமாக விற்றபோது பல விவசாயிகள் கடன் பட்டு, நிலம் வாங்கி இருக்கலாம். அவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகி விடுகிறது. அந்த விவசாயிகளெல்லாம் வக்கற்றவர்கள் (Paupers) ஆகிவிடுகிறார்கள். தங்கள் நிலத்தைக் கஷ்டத்தை முன்னிட்டுப் படு விலைக்கு விற்கிறார்கள். விலை வீழ்ச்சி, விவசாயிகளின் மனோதிடத்தை அழிக்கிறது. விவசாயிகள் தன்னம்பிக்கையை இழந்துபோகிறார்கள். மனோ தைரியம் அழிந்துவிட்டால், விவசாயத்திலும் கவனக் குறைவு உண்டாகிறது. கால நிலை சற்று மாறினாலுங்கூட, விவசாயியின் மன நிலைமை அதிகமாக மாறுவது இல்லை."

1929-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் 1932-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் விலை வாசிகள் எவ்வளவு குறைந்துவிட்டன என்பது கீழ்க்கண்ட புள்ளி விவரங்களால் நன்கு விளங்கும்.

1929-ஆம் வருஷத்துக்கு முன்பு பண்டங்களின் விலை 100 என்று வைத்துக்கொள்வோம். பல தேசங்களிலும் அதே பண்டங்களின் விலை பெரும்பாலும் பாதிக்குமேல் குறைந்துவிட்டது. 1929-ஆம் வருஷத்திற்கு முன்பு விலை 100 ஆக இருந்தது. ஒவ்வொரு தேசத்திலும் எவ்வளவு குறைந்துவிட்டது, அதாவது, விலை 100 ஆக இருந்ததிற்குப் பதிலாக 100க்கு எவ்வளவு வீதம் குறைந்துவிட்டதென்பது கீழே குறிக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| கனடா .... .... .... | 52 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U. S. A.) .... | 50 |
| நியூஜிலந்து .... .... .... | 44 |
| ஆர்ஜண்டைன் .... .... .... | 42 |
| போலந்து .... .... .... | 42 |
| இத்தாலி .... .... .... | 35 |
| ஜெர்மனி .... .... .... | 30 |

இந்திய விவசாயிகளின் கடனுக்கும், மற்றைய தேச விவசாயிகளின் கடனுக்கும் உள்ள ஒரு முக்கிய வித்தியாசம் என்னவென்றால், இதர நாடுகளின் விவசாயிகள் விவசாயச் செலவுக்காக மாத்திரம் கடன் வாங்குகிறார்கள். நம் விவசாயிகளோ பலவகையான வீண் செலவு செய்வதற்கும் கடன் படுகிறார்கள். வெளி நாட்டு விவசாயிகள், விலை வாசி ஏற்றத்தாழ்வு இல்லாத காலங்களில், தங்கள் நிலத்தின் வரும்படியிலிருந்தே கடனைக் கொடுத்து அடைத்து

விடலாம். அப்படியே அவர்கள் செய்து கொண்டும் வந்தார்கள். ஆனால், சமீப காலத்தில் விலை வீழ்ச்சி ஏற்பட்டதாலேதான் பழைய வட்டி முறைப்படி கடனைக் கொடுத்துத் தீர்க்க முடியாது கஷ்டப்படலானார்கள். இந்திய விவசாயிகளின் பாடு அப்படிப்பட்டதன்று. இவர்கள் வாங்கிய கடன், பயனுள்ள செலவுக்கு உபயோகப்படுத்தப் படாமையாலும், அதிக வட்டிக்கு வாங்கப்படுவதாகையாலும், விலை வீழ்ச்சிக்கு முன்னும் சரி; இப்பொழுதும் சரி; கொடுத்துத் தீர்த்து ஒழிக்க முடியாத பெருஞ் சுமையாய் இருக்கிறது.

விலைகள் மிகவும் இறங்க ஆரம்பித்ததும் பல தேச அரசாங்கங்களும், விவசாயிகளுக்குக் கடனாலுண்டான துன்பத்தை உணர்ந்து, அவர்களுக்குப் பல வகையாலும் உதவி செய்துள்ளன. உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U. S. A.) அரசாங்கமே 200 கோடி டாலர் கடன் பத்திரங்களைக் கொடுத்து, வெளியாரிடமிருந்து கடன் வாங்கி, அந்தக் கடனுக்கு நூற்றுக்கு $4\frac{1}{2}$ வீதம் வட்டி கொடுக்கிறது. தான் வாங்கிய அந்தக் கடன் தொகையை அரசாங்கமானது விவசாயிகளுக்கு 100க்கு ஐந்து வீதம் வட்டிக்கு கடனைக் கொடுத்து இருக்கிறது; இன்னும் வேறு பல வகையாலும் விவசாய மக்களுக்கு உதவி செய்கிறது. இட்டாலி நாட்டிலே உழவர் கடனையெல்லாம் அரசாங்கம் உடனே

திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், அவர்களைத் துன்பப்படுத்தக் கூடாதென்றும், விவசாயிகள் தங்கள் கடனை 25 வருஷ காலத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துத் தீர்த்து விடலாமென்றும் அரசாங்கம் சட்டம் செய்திருக்கிறது. இப்படிப் பல வேறு நாடுகளிலும், பல வகையாக அரசாங்கங்கள் விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிக்க முன் வந்திருக்கின்றன.

மற்றத் தேசங்களில் அரசாங்கங்கள் செய்த உதவியை, நமது தேச அரசாங்கம் செய்யவில்லை. சில மாதங்களாக ஜனங்களின் உண்மைப் பிரதிநிதிகள் பல மாகாணங்களில் அரசாங்கம் நடத்த ஆரம்பித்திருக்கின்றார்கள். அது முதல்தான் விவசாயிகளுடைய கடன் தொல்லையைக் குறைக்க வேண்டுமென்ற சிந்தனையும் அரசாங்கத்தாருக்கு உண்டாயிருக்கிறது. அதன் பயனுகத்தான் சென்னை மாகாண அரசாங்க மந்திரி சபையாரும் கடன் தொல்லை நிவாரணச் சட்டமொன்றைச் சட்ட சபைகளிற் கொண்டுவந்திருக்கின்றனர்.

# 3. பல நாட்டு அரசாங்க வேலைகளின் அடிப்படையான தத்துவங்கள்

**ப**ல தேசங்களிலும் அரசாங்கத்தார் செய்துள்ள காரியங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சில தேசங்களிலே அரசாங்கமானது மிகவும் தீவிரமான மாறுபாடுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த நாடுகளிலே அரசாங்கமே இந்த் விவசாயிகளின் கடன் விஷயத்தில் தலையிட்டு, விவசாயக் கடன் தொல்லையை ஒழிக்க முயல்கிறது. இம்மாதிரியான முறைகளை அனுஷ்டித்த தேசங்கள், மத்திய ஐரோப்பாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலுமுள்ள நாடுகளாகும். இந்த இடங்களில் அரசாங்கமானது விவசாயிகள் கடனுக்கு அதிக வட்டி கொடுத்தால், அந்த வட்டியைக் குறைத்துவிடுகிறது; விவசாயியின் நிலம் கடனுக்காக ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டால், அதைத் தடுக்கிறது; வட்டியைக் கேட்கக்கூடாது என்றும் சில சமயங்களில் உத்தரவு செய்திருக்கிறது. அதுமாத்திரமன்றி, 'கடன் கொடுத்த முதலிலேகூட முழுவதையும் கேட்கக்கூடாது; முதலிலேயே கொஞ்சம் தள்ளிக் கொடுக்க வேண்டும்,' என்று கூடச் சட்டம் ஏற்படுத்துகிறது.

வேறு சில அரசாங்கங்கள் இன்னும் கொஞ்சம் வேகக் குறைவான நிவாரண முறை

களை அநுஷ்டித்திருக்கின்றன. அந்த அரசாங்கங்கள் கடன் கொடுக்கல் வாங்கல்களில் தலையிடுகின்றன. ஆனால், மேலே கூறப்பட்ட அரசாங்கங்களைப்போல அவ்வளவு அதிகமாகத் தலையிடுவதில்லை. இத்தகைய அரசாங்கங்கள் பல வேறு முறைகளைக் கையாளுகின்றன. அவைகளாவன :

கொடுக்க வேண்டிய கடனை வருஷம் ஒன்றுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக 25 வருஷத்திற்குள் கொடுக்கும்படி, அல்லது பல வருஷங்களில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வது; நிலத்தைக் கடன்காரர் ஜப்தி செய்தல், ஏலத்துக்குக் கொண்டுவருதல் முதலிய வகையான காரியங்களை முழுவதும் தடுப்பது; சட்டமூலமாகக் கடன் கொடுத்தவர்களையும் வாங்கியவர்களையும் ஒன்று சேர்த்து, கடன் தொகையைச் சமரச மூலமாகக் குறைத்து, அந்த வகையாக விவசாயிக்கு நன்மையைத் தருவது; அரசாங்கத்தாரே தமது பணத்தைக் கொண்டு கடன் தொகையில் ஒரு பகுதியைக் கடன் கொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது; கடன் கொடுக்க முடியாமையால் நிலத்தை விற்க வேண்டி நேரிட்டால், அந்த நிலத்தை இவ்வளவு விலைக்குக் குறைத்து விற்கக் கூடாது என்று நிர்ணயிப்பது—இவை போன்றவை இன்னும் பல.

மூன்ரும் வகையான அரசாங்கங்கள், நாட்டு மக்கள் தங்களுக்குள்ளே ஏற்படுத்திக் கொண்டிருக்கிற பொருளாதார ஏற்பாடுகளில் அரசாங்கமானது எந்த விதத்திலும் தலையிடக் கூடாது என்று எண்ணுகிறவைகள். இவ்வகைப்பட்ட அரசாங்கங்களிலே விவசாயிகளின் கடன் தொல்லையைக் குறைக்க அதிக முயற்சி செய்யப்படவில்லை.

பொதுவாகச் சில வகைப்பட்ட தேசங்கள் பொருளாதார விஷயங்களில் ஒரு வித மாறுதலையும் விரும்புவதில்லை. கடன் கொடுத்தவர்கட்கு அதிகப்படியான அசௌகரியம் ஏற்படக் கூடாது என்று எண்ணினுலுங்கூடச் சில காரியங்களையாவது அந்த அரசாங்கங்கள் செய்யலாம். கடனளிகளைத் தங்கள் கடன் தொகையை அநேக வருஷங்களில் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுக்கச் செய்யலாம்; விவசாயக் கடனளிகள் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையில் ஒரு பங்கைச் சர்க்கார்ப் பணத்திலிருந்து கொடுக்கலாம்; கடன் வாங்கியவர் கொடுத்தவர்களிடையே சட்ட மூலமாகச் சமரசத்தை உண்டாக்க முயற்சி செய்யாமல், மத்தியஸ்தம், பஞ்சாயத்து முதலியவைகளின் உதவியால் சமரசத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிக்க எந்த முயற்சி செய்தாலும் சரி; அந்த முயற்சியானது, விவசாயி நியாயமாக விவசா

யத்துக்காகக் கடன் வாங்க நேரிட்டால், குறைந்த வட்டிக்கு அவனுக்குப் பணம் கிடைக்கும்படி செய்ய அநுகூலமாய் இருக்கவேண்டும். அரசாங்கமே இதற்காகத் தனிப்பட்ட பாங்கிகளை ஏற்படுத்தலாம்; கூட்டுறவு இயக்கத்தை விருத்தி செய்யலாம்.

அரசாங்கமானது வேறு என்ன செய்தாலும், செய்யாவிட்டாலும், கடன் கஷ்டத்தால், கடனாளியின் இமிசையால், நிலமானது ஏலத்துக்குவந்து, அது குறைந்த விலைக்குப் போகும் போலிருந்தால், அதையாவது அரசாங்கம் தடுக்க வேண்டும். இரண்டாவது, ஒரு தேசத்தில் எல்லா இடத்திலும் இருக்கிற விவசாயிகளுக்கும் வட்டியில் அதிக தாரதம்மியமில்லாமல் ஒரே மாதிரியாகக் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

விவசாயிகளின் கஷ்டத்தை நீக்குவதற்குக் கடன் பளுவை மாத்திரம் குறைத்துவிடுவது போதாது. விவசாயி கௌரவமாகக் கஷ்டமில்லாமல் வாழ வேண்டுமானால், அவன் உண்டாக்கும் பண்டங்களுக்கும், விளைபொருள்களுக்கும் நல்ல விலை கிடைக்கும்படி செய்ய வேண்டும். இந்த காரியத்தை மிகச் சுலபமாகச் சொல்லிவிடலாம்; செய்வதோ, மிகக் கஷ்டமானது. இந்தியாவைப் போன்ற நாட்டில் இந்தக் காரியமானது, மத்திய அரசாங்கத்தாராலேதான் (Central Govt.) செய்யப்

பட வேண்டும். இந்தக் காரியத்தை மாகாண அரசாங்கத்தார் செய்ய முடியாது.

ஒவ்வொரு அரசாங்கமும், விவசாயத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உறுதியுடன், ஒரு திட்டம் போட்டுக் கொண்டு வேலை செய்ய வேண்டும். **ருமானியா (Rumania)** தேசத்தில் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்த நிபுணர்களும் அரசாங்கமும் கூறுவதாவது: "விவசாயமானது சாஸ்திரீய முறையில் செவ்வையாக நடைபெறுமானால், விவசாயிகளின் கடன் தொந்தரவு அவ்வளவாக இராது. கடன் நிவாரணைக்காகச் சட்டம் ஏற்படுத்த வேண்டுவதில்லை. கடன் பளுவை நீக்கினால் மட்டும் விவசாய விருத்திக்கான காரியத்தைச் செய்து முடித்துவிட்டதாக நினைத்தல் தவறு. விவசாயம் இலாபகரமானதாக இருக்கும்படி, உள் நாட்டிலேயாவது விளை பொருள்களின் விலை உயரும்படி செய்ய வேண்டும்," என்பதாகும். **யூகோசிலேவியா (Yugoslavia)** அரசாங்கமும் பெரும்பாலும் இதேவித முடிவுக்கே வந்திருக்கிறது.

## 4. ஒவ்வொரு தேசத்திலும் முக்கியமாக என்ன என்ன சட்டங்கள் செய்திருக்கிறார்கள்

### 1. ஜெர்மனித் தேசம்

ஜெர்மனித் தேசத்தில் சிறு விவசாயி எனப்படுபவன், சாதாரணமாக ஒரு குடும்பத்துக்கு வேண்டிய வரும்படியைத் தருகிற நிலத்தைத் தானே பயிர்செய்பவனாவான். அவனுக்கு $7\frac{1}{2}$ ஹெக்டேர்கள் முதல் ($7\frac{1}{2}$ **hectares**) 125 ஹெக்டேர் (ஹெக்டேர் என்பது ஒருவித ஜெர்மன் அளவு) நிலமானது சொந்தமாக உண்டு. 1935ல் எடுத்த கணக்கின்படி ஹெக்டேர் ஒவ்வொன்றுக்கும் உள்ள கடன் 650 மார்க்குகள் ஆகும். சுருக்கமாகக் கூறுமிடத்து, (மொத்த நிலத்துக்கும் உள்ள சராசரிக் கடனை விட) சிறு அளவு நிலம் வைத்திருப்பவர்களின் நிலத்தின்மேலுள்ள கடன் கொஞ்சம் குறைவு என்றே சொல்லலாம்.

1929-ஆம் வருஷத்திலேயே சிறிய விவசாயிகளின் கடன் கஷ்டத்தைக் குறைக்கவேண்டுமென எண்ணப்பட்டது. கிழக்குப் பிரஷியாவில் அரசாங்கத்தாரால் சில சௌகரியங்கள் செய்யப்பட்டன. 1931-32ல் வியாபார மந்தத்தாலுண்டான நெருக்கடி அதிகமாகிவிட்டபடியால், மேலும் பல விதச் சௌகரியங்கள்

செய்து கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உண்மையில் கஷ்டப்படுகிற விவசாயிக்கு வேண்டிய கடனை ஜெர்மன் தொழில் ஈட்டு பாங்கியில் (Bank for German Industrial Securities) இருந்து வாங்கிக்கொள்ள வசதி உண்டாக்கப்பட்டது. அப்படி பாங்கி கொடுக்கிற கடனில் நூற்றுக்கு 25 பங்கு பணத்துக்கு அரசாங்கம் உறுதி கொடுத்தது. அதாவது, அந்தக் கடன் சரியாகத் திருப்பிக் கொடுபடாவிட்டால், 100க்கு 25 விழுக்காடு அரசாங்கத்தார் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்கள்.

1931ல் கீழ் ஜெர்மனியில் (Eastern Germany) விவசாயிகளின் நிலைமை மிக மோசமாகக் காணப்பட்டது. 1931-ஆம் வருஷம் நவம்பர் மாதம் ஒரு சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவின்படி கடனுக்காக நிலத்தையாவது மாசூலையாவது ஜப்தி செய்ய முடியாது. அது மாத்திரமன்றி, விவசாயியின் எந்த விதமான உடைமையையும் கடனுக்காக ஜப்தி செய்ய முடியாது; ஏதாவது சொத்தின் மேல் கடன் கொடுத்தவர்களுக்கும் சரி; வெங்நிலைக் கடனைக் கொடுத்தவர்களுக்கும் சரி— இதே சட்டமே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. கடன் கொடுத்தவனும் கடன் வாங்கியவனும் தங்களுக்குள்ளேயே சமரசமாக ஏதாவது ஓர் ஏற்பாட்டைச் செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அரசாங்கம் தலையிட்டு, கடன்

திருப்பிக் கொடுப்பதில் காலதாமதமானால் பரவாயில்லை என்று சொல்லலாம்; அல்லது வட்டிப் பாக்கியைக் கொடுக்க வேண்டுவதில்லை என்று முடிவு செய்யலாம்; வட்டி விகிதத்தைக் குறைத்துவிடலாம்; அல்லது முதலிலேயே நூற்றுக்கு ஐம்பதுவீதம் கொடுத்தால் போதும் என்று கூட உத்தரவு செய்துவிடலாம்.

1933ல் ஜெர்மனியின் எல்லாப் பக்கத்திலுமுள்ள விவசாயிகளுக்கும் கடன்காரர்களிடமிருந்து பாதுகாப்பு ஏற்பட்டது. விவசாயியின் சொத்துகளைக் கடனுக்காக ஜப்தி செய்யக்கூடாது. அதோடு ஒரு புதுச் சட்டமும் இயற்றப்பட்டது. அந்தச் சட்டப்படி ஏதாவதொரு விவசாயிக்குக் கடன் தொந்தரவு அதிகமாய் இருந்தால், கோர்ட்டுக்கு மனுச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், கோர்ட்டார்கள் சொத்து மதிப்பு எவ்வளவு, கடன் தொகை எவ்வளவு என்று பார்ப்பார்கள். சொத்தின் மதிப்புக்கு மூன்றில் இரண்டு பங்குக்கு ($\frac{2}{3}$) மேல் கடன் இருந்தால், அந்தக் கடன் தொகை சொத்தின் மதிப்புக்கு மூன்றில் இரண்டு பங்குக்குமேல் இல்லாதபடி குறைத்துவிடுவார்கள். உதாரணமாக ஒருவனுடைய சொத்து மதிப்பு 300 ரூபாய் என்றும், அவனுடைய கடன் 350 ரூபாய் என்றும், வைத்துக்கொள்வோம். அவன் கோர்ட்டுக்கு மனுச்செய்துகொண்டால் 350 ரூபாய்க் கடனை 200 ரூபாயாகக் குறைத்து

விடுவார்கள். ஏனென்றால், 300 ரூபாய் மதிப்பு நிலத்துக்கு அம்மதிப்பில் மூன்றில் இரண்டு பங்குதான் ($\frac{2}{3}$) கடன் இருக்கலாம். அக்கடன் 200 ரூபாய்.

பிறகு கோர்ட்டானது அந்தக் கடன் தொகைக்கு ஏற்பாடு செய்யும்படி சர்க்கார் பாங்கியையோ, அல்லது ஏதாவது சர்க்காரின் ஸ்தாபனத்தையோ, அல்லது சர்க்காரின் மேற்பார்வையில் இருக்கிற ஏதாவது ஒரு ஸ்தாபனத்தையோ குறிப்பிடும். அந்த ஸ்தாபனம் அந்த விவசாயியின் கடனைப்பற்றி விசாரணை செய்யும். கடன் தொகை கொடுப்பதில் கடன் கொடுத்தவரோடு ஏதாவது ஒரு விதச் சமரசத்தை ஏற்படுத்திக்கொள்ளும். அவசியமானால், நிலத்தை விற்கும். அல்லது கடன் தொகையைத் தானே கொடுக்கும். அந்த ஸ்தாபனம் கடன் கொடுத்தவர்களோடு சமரச ஏற்பாட்டைச் செய்ய முடியாவிட்டால், கடன் கொடுத்தவர்களில் பெரும்பாலார் **(Majority)** ஒத்துக்கொள்ளுகிறபடி மற்றவர்களும் உடன்படவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்குக் கோர்ட்டாரின் உத்தரவைப்பெற்று, தன் காரியத்தைச் செய்து முடிக்கும்.

## கடனைக் குறைத்தல்:

சர்க்கார் வட்டி விகிதத்தை நூற்றுக்கு $4\frac{1}{2}$ யாகக் குறைத்துவிடலாம். அதாவது விவசாயி

களின் கடனுக்கு நூற்றுக்கு $4\frac{1}{2}$க்கு மேல் வட்டி கொடுத்து வந்தால், அந்த வட்டியை $4\frac{1}{2}$யாகக் குறைத்துவிடலாம். அல்லது அந்தக் கடனின் முதல் தொகையைக் கடன்காரர் கேட்கக் கூடாது; வட்டியையே வாங்கிக்கொண்டு வரலாம் என்னும் கடன் மாற்றத்தை (Conversion of debt) ஏற்படுத்தலாம். நிலம் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டால், அதன் விலையைச் சர்க்காரே நிச்சயிக்கும். அந்த நிலத்துக்குப் போடும் தொகைக்கு இலாபம் வரக் கூடிய அந்த விலையையே நிர்ணயிக்கும். விவசாயியின் நிலமானது கடனிலிருந்து விடுவிக்கப் பட்டால், பிறகு அந்த விவசாயி, சில சட்ட வரம்புக்குள்ளேதான் அந்த நிலத்தின்மேல் கடன் முதலியவை வாங்கக்கூடும். நிலத்தின் மேல் கடன் கொடுக்கும் சில ஸ்தாபனங்களுக்கு அதிக அசௌகரியம் இல்லாதபடி, சர்க்கார் சில ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது.

புதிதாகக் கடன் வாங்குவதைத் தடுப்பதற்கும் சில சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எர்போப் (Erbhofe) என்ற அளவு நிலத்தின்மேல் கடன் இருந்தால், கோர்ட்டின் உத்தரவின்பேரிலேதான் அதை வாங்கலாம். எர்போப் என்ற அளவு நிலத்தைப் பாகம் பிரித்துக்கொள்ளக் கூடாது. அந்த நிலத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கு உரிமை இருந்தால், அவர்களெல்லாம் அந்த நிலத்தின் வரும்

படியில் பங்கு எடுத்துக்கொள்ளலாம். இது சம்பந்தமான வேறு சில விதிகளும் இருக்கின்றன.

விவசாயத்தைப்பற்றிய புது நடவடிக்கைமுறை:

(New agricultural policy)

(1) அடைமானக்கடன் திருப்பிக்கொடுக்கும் வாய்தா ஒத்தி வைப்பு: 1934ஹு ஜுலை மாதத்திற்கு முன்பு அடைமானத்தின் மேலே கடன் வாங்கி, கடனாளி உண்மையிலேயே திருப்பிக் கொடுக்க விரும்பியும் கொடுக்க முடியாது கஷ்டப்படுவானுல், அவன் இந்தச் சட்டத்தின்படி கடன் வாய்தாவை ஒத்தி வைக்கும்படி ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

(2) இன்னொரு சட்டப்படி (The Decree Law of 1934) ஒருவன் தனக்குள்ள கடனை, கடன் கொடுத்தவரிடமிருந்து வேருெருவரிடம் மாற்றி வைத்துக்கொள்ள வேண்டுமானல், அதற்கான ஸ்டாம்புக் கட்டணம், ரிஜிஸ்தர் கூலி முதலியவை மிகவும் குறைக்கப்பட்டன.

(3) நிலத்தின் மேலோ, வேறு வகையாலோ கடன் வாங்கி, கடன் தொகையை இன்ன சமயத்தில் (இன்ன கெடுவில்) கொடுப்பதெனக் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தால், கடன் வாங்கியவன் சௌகரியப்பட்டால், அந்தத் தவணைக்குள் திருப்பிக் கொடுக்கலாம்.

அந்தத் தவணைக்குள் திருப்பிக் கொடுத்தற்காக அந்தப் பணத்தை வாங்கிக்கொள்ள மாட்டே னென்று கடன் கொடுத்தவன் சொல்ல முடி யாது.

(4) அடைமானக் கடன் முதலிய சில முக் கிய கடன்களுக்கு 1935ஹு ஜனவரிமீ முதல் ½ வட்டிக்குமேல் கொடுக்க வேண்டுவதில்லை எனச் சட்டம் விதிக்கப்பட்டது.

இந்த 4 சட்டங்களும் பொதுவான சட்டங் களே. விவசாயிகளையல்லாமல் மற்றவர்களுக் கும் இந்தச் சட்டங்கள் பயனுள்ளவையாய் இருந்தன. விவசாயிகள் இந்தச் சட்டங்களால் மிகவும் பயன் பெற்றார்கள். விவசாயிகளுக்கு இந்தச் சட்டங்களாலுண்டான அநுகூலங் களே போதுமென்றும், இன்னும் அதிகமான ஏற்பாடுகள் வேண்டா என்றும் ஜெர்மன் அர சாங்கத்தார் எண்ணுகின்றனர். அம்மக்களின் கடன் பளுவைப் பார்க்கும்போது அது உண்மை என்றே படுகிறது.

## 2. பிரான்ஸ்

பிரான்ஸ் தேசத்திலே முக்கியமாகக் கொடுக்க வேண்டிய கடன்களை அந்தக் காலத் தவணைக்குள் கொடுக்க வேண்டுவதில்லை. சௌ கரியமாகக் கொடுக்கலாம் என்று சட்டம் விதித் திருக்கிறார்கள். இதை அல்லாமல், விவசாயி களுக்கு வேறு அதிகமாக ஒன்றும் செய்ய

வில்லை. அதற்கு முக்கிய காரணம் பெரும் பாலும் பிரெஞ்சு விவசாயிகள் பொருள் நிலை அவ்வளவு மோசமாக இல்லாததேயாகும். பிரான்ஸ் தேச விவசாயிகள் மிகச் செட்டான வர்கள்; கெட்டிக்காரர்கள்; பல விதச் சிறந்த முறைகளையும் விவசாயத் துறையில் அநுஷ் டிப்பவர்கள். அதனாலேதான் அவர்கள் நிலை செம்மையாய் இருக்கிறது.

## 3. இத்தாலி

இத்தாலித் தேச அரசாங்கம் இந்த விஷ யத்தில் அதிக புரட்சித் தன்மையான சட்டங் களை ஏற்படுத்தவில்லை.

விலை வாசி ஏறி இருந்த சமயத்தில் வாங் கிய கடனைச் சுலபத்தில் கொடுத்துவிடக் கூடும் என்று நினைத்துச் சில விவசாயிகள் தாராள மாகக் கடன் வாங்கியிருந்தார்கள். திடீரென விலை வாசி விழுந்துவிட்டபடியால், அவர்கள் நிலை கவலைக்கிடமானதாகிவிட்டது. சீக்கிரம் கொடுத்துவிடலாமெனக் குறுகிய காலக்கடனை (சில மாதம் அல்லது வருஷங்களில் கொடுப்ப தாக) வாங்கிய தொகைகளை 25 வருஷத்தில், வருஷத்திற்குக் கொஞ்சமாகக் கொடுத்தால் போதுமென்று 1930ஆ ஜூலையீ சர்க்கார் சட்டம் விதித்தது.

இப்படி நீண்ட காலக் கடனை மாற்றப் பட்டதும், வருஷா வருஷம் கொடுக்க வேண்டிய

தொகையில் நூற்றுக்கு $2\frac{1}{2}$ வீதம் சர்க்காரே கொடுத்துவிடுவதென ஒரு முடிவு செய்தது. மேலும், இது மாதிரி மாற்றப்பட்ட கடனுக்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டி கொடுத்தால் போதும்; அதற்குமேல் கொடுக்க வேண்டுவதில்லை எனவும் ஏற்பாடு செய்தது.

சில விவசாயிகள் விவசாயப் பாங்கிகளிடமிருந்து கடன் வாங்கி இருந்தால், அந்தக் கடன் ஒரு வருஷத்தில் கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அதை ஐந்து வருஷத்தில் கொடுத்தால் போதும் என்றும் அரசாங்கத்தார் அநுமதித்தார்கள். இவ்விதக் கடனுக்கும் வட்டியில் ஒரு பகுதியை அரசாங்கத்தார் கொடுத்து உதவினர்.

சில விவசாயிகள் தேச விவசாய முன்னேற்றத்துக்குப் பெரிய நன்மை செய்திருந்தாலும், சிறந்த முறையில் விவசாயம் செய்து வந்தாலும், அல்லது அதிக கஷ்டப்பட்டாலும் அவர்களுக்கு விவசாய மந்திரி, நூற்றுக்கு $3\frac{1}{2}$க்கு மேற்படாத ஒரு தொகையை 25 வருஷத்துக்கு உபகார நிதியாகக் கொடுத்து உதவி செய்யலாம்.

வேறொரு சட்டம் 1934ல் செய்யப்பட்டது. அந்தச் சட்டப்படி அடைமானக் கடன்கொடுக்கிற ஸ்தாபனங்களும், தேசீய விவசாய அபிவிருத்திக்கடன் ஸ்தாபனமும் (The National Consortium of Agricultural Improvement

Credit), நூற்றுக்கு 4க்கு மேற்பட்ட வட்டி விகிதத்திற்குக் கடன் கொடுத்திருந்தால், அந்த வட்டியை நூற்றுக்கு 4 வீதமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு உடன்படாவிட்டால், முதலை மாத்திரம் வாங்கிக்கொள்ள வேண்டும்.

அடைமானக் கடன் அல்லாத மற்றக்கடன் வாங்கியவர்கள், பழைய சட்டம் ஒன்றின்படி, அக்கிரிமெண்டு ஏற்பட்டு 2 வருஷம் ஆனாலுங் கூடக் குறைந்த வட்டி விகிதப்படி கடன் கொடுக்கலாமென்று அரசாங்கத்தார் கட்டளை பிறப்பித்தனர்.

### 4. ஸ்விட்ஜர்லாந்து

இந்தத் தேசத்திலே விவசாயிகளின் கடனுக்குக் காரணங்கள் பலவாகும். சில விவசாயிகள் நிலத்தை விருத்தி செய்வதற்காகக் கடன் வாங்கினார்கள். சிலர் நிலத்தை மிகவும் அதிகமான விலைக்கு வாங்கினர். சிலர் நிலச் சாகுபடியில் அதிகமான பணத்தை விரயம் செய்தனர். ஆகையால், 1921 முதல் 1927 வரையிலும், பிறகு 1930-ஆம் வருஷத்திலிருந்தும் விவசாயம் இலாபந் தரக்கூடியதாய் இல்லை. நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படி நூற்றுக்கு இரண்டு மூன்றுதான். வட்டியோ, குறைந்தது 5 வீதம் கொடுக்க வேண்டி இருந்தது. ஆகையால், அந்த விவசாயிகள் தங்கள்

முதலிலேயிருந்து செலவு செய்ய வேண்டி வந்தது; முதல் ஆனதும், கடன்வாங்கியும் செலவு செய்ய நேரிட்டது. நிலமானது நல்ல ஆதாரமென எண்ணப்பட்டதால், பாங்கிகள் நிலத்தின்பேரிலே தாராளமாகக் கடன் கொடுத்து வந்தன.

விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து விடுவிப்பதற்காக மூன்று காரியங்கள் செய்யலாம் என எண்ணப்பட்டது: அவை, (1) விவசாயிகள் சகாய பாங்கிகளை அதிகமாக்கல், (2) துன்பப்படுகிற விவசாயிகளைக் காப்பாற்றத் தக்க சட்டங்களை அதிகமாக உண்டாக்கல், (3) விவசாயிகள் மறுபடியும் அதிக கடனில் அகப்பட்டுக்கொள்ளாதபடி காப்பாற்றுதல் என்பவை.

**விவசாய சகாய பாங்கிகள்:** இவை விவசாயிகளுக்கு வட்டிக்காவது, வட்டி இல்லாமலாவது கடன் கொடுக்கின்றன; விவசாயிகள் பழைய வட்டிகளைக் கொடுப்பதற்காகச் சிறு பண உதவியையும் செய்கின்றன. வேறு சிறு பண உதவிகளையுங்கூடச் செய்து தருகின்றன.

1934ளு செப்டம்பர்மீ அரசாங்க உத்தரவின்படி, ஒரு விவசாயி கடனால் கஷ்டப்பட்டால், கடன் கொடுத்தவனோடு சமரசமான ஏற்பாடு செய்துகொள்ளக்கூடும். அந்த ஏற்பாட்டிற்குப் பிறகு அந்த விவசாயி தன் நிலத்தைத் தவறாது செவ்வையாகப் பயிரிட வேண்டும்.

கடன்காரனோடு செய்துகொள்ளும் ஏற்பாடு, அவனுடைய சம்மதத்தின்பேரிலும், சம்மதம் கிடைக்காவிட்டால் கட்டாயத்தின் பேரிலும் உண்டாகக்கூடும். கடன்காரன் சம்மதமின்றிச் செய்துகொள்ளக் கூடியவை பின் வருவன:

(க) முதலாவது முதல் தொகையைக் கொடுக்காது நிறுத்திவைத்தல். அப்படி நிறுத்தி வைப்பதை நான்கு வருஷம் வரையிலேதான் செய்யலாம். கடன் வாங்கியவன் வருஷா வருஷம் இவ்வளவு கொடுப்பதென்று ஏற்படுத்திக் கொண்டிருந்தால், அந்தத் தொகையைக் குறைத்துக்கொள்ளலாம். அல்லது ஒவ்வொரு தடவையும் இவ்வளவு கொடுப்பதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அந்தத் தொகையையும் குறைத்துக்கொள்ளலாம். எந்த ஏற்பாடு செய்தாலும், அது நான்கு வருஷத்திற்கு மேல் அதிகமான கால ஏற்பாடாக இருக்கக் கூடாது.

(உ) சொத்து ஜாமீன்பேரில் கொடுத்திருக்கும் கடன் வட்டி அதிகமாக இருந்தால், நூற்றுக்கு $4\frac{1}{2}$ யாகக் குறைத்துவிடலாம்.

(ங) ஜாமீன் இல்லாமல் கொடுத்த பணத்திற்கு இதைப்பற்றி ஏற்பாடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்திற்கு 4 க்கு மேற்படாத வருஷங்களில் கொடுக்க வேண்டிய வட்டியைக் குறைத்துவிடுவது ; அல்லது கொடுக்காமல் இருக்கச் செய்வது.

(ச) கடன் ஏற்பாடு செய்யும்போது, கைந் நோட்டின்மேல் பணம் வாங்கி, முதலில் நூற்றுக்கு 50 வீதம் நஷ்டமுண்டானால், வட்டியில் 75 முதல் 90 சத விகிதம் கொடுத்து வட்டி முழுவதையும் ரத்து செய்துகொள்ளலாம்.

அதுமாத்திரமன்றி, பிறர் நிலத்தைக் குத்தகைக்குச் சாகுபடி செய்பவர்கள் குத்தகைப் பணம் பாக்கி இருந்தால் அதை முழுவதுமோ, அதில் பெரும்பாலான பாகமோ கொடுக்காமல் இருக்கும்படி உதவி செய்வதும் அந்த நாட்டில் ஏற்பாடு ஆயிற்று.

ஸ்விட்ஜர்லாந்து தேசத்திலே விவசாயிகளின் கடனைப்பற்றி விசாரணை செய்ததில் இரண்டு விஷயங்கள் தெரிய வந்தன: ஒன்று, கடனில் அழுந்திய நிலங்கள் சரியாகச் சாகுபடி செய்யப்படாமல் கிடக்கின்றன என்பது. இரண்டாவது, அப்படிக் கடனில் சிக்குண்ட நிலங்கள், குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன என்பது.

1934 ல் ஏற்பட்ட சட்டத்தால் கடன்பட்டிருந்த அநேக விவசாயிகள் தங்கள் நிலத்தை விற்கவேண்டிய அவ்வளவு நெருக்கடியில் அகப்பட்டுக்கொள்ளாதிருக்க முடிந்தது. அரசாங்க இலாக்காக்களே அநேக கடன் சமரச ஏற்பாடுகளை உண்டாக்கின. சிலர் கோர்ட்டுகளுக்கு மனுச் செய்துகொண்டதன்பேரில் சமரச ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜனங்களில் முக்கியமான விவசாயிகட்கு உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட பாங்கிகள் அநேக விதமாக உதவிகளைச் செய்தும், மேலே சொல்லப்பட்ட சட்டத்தாலான அநுகூலங்கள் செய்யப்பட்டும், நிலத்தை விற்கும் விவசாயிகளின் தொகையும், ஒன்றுமற்றுப் போகிற விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகமாகக் குறையவில்லை. அதே சமயத்தில் அநேக விவசாயிகள் இரண்டுவித முறைகளையும் அநுஷ்டித்து அநேக சௌகரியங்களைச் செய்து கொண்டார்களென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகையால் 1936-ஆம் வருஷம் ஜூன்மீ விவசாயிகளின் கடன் கஷ்ட நிவர்த்திக்காக ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி கடனைச் சாவதானமாகக் கொடுக்கலாம் என உத்தரவு இடப்பட்டது. 8 வருஷத்துக்குமேல் அதிகப்படாத காலத்திற்கு நூற்றுக்கு $4\frac{1}{2}$ வீதம் வட்டி கொடுத்தாற்போதும் என ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இருவித உதவியும் செய்தும், அந்த விவசாயிக்கு வட்டி கொடுப்பதற்கான வரும்படியும், தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் போதுமான உணவுக்கான பொருளும் அவன் நிலத்திலிருந்து கிடைக்காவிட்டால், அவை இரண்டும் கிடைப்பதற்கு வேண்டிய அளவு சௌகரியமாகும்படி, கடன் வாங்கிய முதல் தொகை குறைக்கப்படும்.

இப்படிக் கடன் ஏற்பாடு செய்வதில் அரசாங்கம் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுகிறது. அது தன் வருவாயிலிருந்து பெரிய ஒரு தொகையை விவசாயிகளின் கஷ்ட நிவர்த்திக்காக உபயோகப்படுத்துகிறது.

கடன் கொடுத்தவனும் தேச நன்மைக்காகப் பணத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். வர வேண்டிய கடன் தொகையில், ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு தொகை 25 வருஷத்தில் கொடுக்கப்படுமென உடன்படிக்கை செய்யப்படும். கடன் கொடுக்க வேண்டியவனும் அரசாங்கமும் வருஷாவருடம் இவ்வளவு கொடுப்பதென்பது ஏற்பாடு செய்யப்படும். அதற்கான ஒரு கடன் தீர்ப்புப் பத்திரமும் கடன் கொடுத்தவனுக்குக் கொடுக்கப்படும். அந்தக் கடனுக்கு நூற்றுக்கு நான்குக்குமேல் வட்டி கொடுக்கப்படாது. இப்போது தள்ளுபடி செய்யப்படுகிற தொகைக்கெல்லாம் ஓர் இரசீது கொடுக்கப்படும். பிறகு ஒரு காலத்தில் அந்த விவசாயி பணத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டால், அந்த இரசீது உபயோகப்படக்கூடும். நிலத்தின் தற்கால விலையைவிட இரண்டு பங்குக்கு மேற்பட்ட கடன் இருந்தால், ஓர் ஏற்பாட்டின்படி கடன் தொகையில் எத்தனை சத விகிதம் (நூற்றுக்கு எவ்வளவு) கொடுப்பது என்பது நிச்சயிக்கப்படும்.

பிராமிசரிநோட்டின்மேல் கொடுக்கபபட்ட கடன்களுக்கும் இது சம்பந்தமாக விசாரணை செய்யப்படும்.

இப்படியெல்லாம் செய்து விவசாயியை விடுவித்தால், அவன் தன் மூடத்தனத்தால் மறுபடியும் அவஸ்தைக்கு உள்ளாகலாம். அப்படி அவன் தொல்லையில்அகப்படாதிருக்கும்படி சில காரியங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. கடன் ஏற்பாட்டில்சம்பந்தப்பட்ட விவசாயிதன் நிலத்தைத் தன் இஷ்டப்படி விற்பனை செய்யக் கூடாது. அவன் வரவு செலவுக் கணக்குகளைச் செவ்வையாக வைத்திருக்க வேண்டும். சில சமயங்களில் விவசாயியை ஒரு சட்ட ஆலோசனைக்காரன் பார்வையிலிருக்கும்படி செய்வதும் உண்டு.

## 5. டேன்மார்க்கு

டென்மார்க்கில் சுலபமாகக் கடன் வாங்குவதற்கான சௌகரியங்கள் இருந்தன. அதனல், விவசாயிகளும் ஏராளமாகக் கடன் வாங்கிவிட்டார்கள். நில அடைமானத்திற்குக் கொடுக்க வேண்டிய தொகைகளை, விலை வாசி குறையும் காலம் வரையில் கொடுத்துவந்தார்கள். இப்போது கால நிலை மாறிவிட்டதால், அதே மாதிரி கொடுக்க முடியவில்லை.

டென்மார்க்கு அரசாங்கமானது விவசாயிகள் மிகவும் அவசியமானவர்கள் என்றும்,

அவர்களைக் காப்பாற்றுவது முக்கியம் என்றும் எண்ணுகிறது.

முதல் முதல் அரசாங்கம் செய்த காரியமாவது, 'நெருக்கடிக்கான தொகை' ஒன்றை வைத்து, அந்தப் பணத்திலிருந்து விவசாயிகளில் மிகவும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்தது.

நெருக்கடி மிக அதிகமாய்விட்டபடியால், வேறு வகையான உதவிகளும் செய்ய வேண்டி நேரிட்டது. கடன் தவணைகள் ஒத்தி வைக்கப்பட்டன; கடன் கொடுத்தவர்களுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டன; கடன் தொகைகள் மாற்றப்பட்டன (Conversion of Loans). அரசாங்கத்தார் விவசாயிகளுக்குக் கொடுத்திருந்த பணத்தில் பல மாகாண அரசாங்கமும் பாப்பராகப் போகாதவாறு (Bankrupt) இருக்க எவ்வளவு பணத்தைத் திருப்பி வாங்கிக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவு பணத்தை வாங்கிக் கொண்டால் போதுமென உத்தரவிட்டார்கள்.

1933-ஆம் வருடம் வேறு சில சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. கடன் கொடுத்தவர்கள் தங்களுக்கு வர வேண்டிய தொகையில் நூற்றுக்கு 35க்கு மேற்பட்ட தொகையைக் கேட்கக் கூடாது. அப்படிக் கேட்கும் தொகையும், நிலத்தின் பெறுமானத்தில் நூற்றுக்குப் பத்துப் பங்குக்குமேல் இருக்கக்கூடாது. அந்தத் தொகையும் மொத்தத்தில் 8,400 கிரவு

னுக்குமேல் இருத்தலாகாது. மேலே சொல்லப்பட்ட கணக்குக்குமேல் நூற்றுக்கு இன்னும் 35 சத விகிதம் கூட, கடன் கொடுத்தவர் வாங்கிக்கொள்ளக்கூடும். அப்படி அதிகமாக வேண்டுமானால், ஐந்து வருஷம் காத்திருக்க வேண்டும். அந்த ஐந்து வருஷத்திற்கும் முதலுக்கு வட்டி கிடைக்காது.

பழைய சட்டப்படி ஏற்பாடுசெய்துகொள்ளாத விவசாயிகள் தங்கள் நிலத்தின் மதிப்புக்குமேல் கொண்ட கடன் தொகை கொடுப்பதில் மூன்று வருஷ வாய்தாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

கடனுக்காக ஏதாவது நிலமானது விற்பனைக்குக் கட்டாயத்தினால் கொண்டுவரப்பட்டால், அப்போது கடனாளி தான் ஓர் ஏற்பாடு செய்துகொள்ள முயன்றதாக நிரூபித்தாலும், அல்லது கூடிய சீக்கிரம் அந்தக் கடனைக் கொடுத்துவிடக் கூடுமென உறுதி செய்தாலும், மூன்று மாதத் தவணை கொடுக்கப்பட வேண்டும். சில சமயங்களில் இன்னும் அதிகமான காலத்திற்குத் தவணை கொடுப்பதும் உண்டு.

இதையல்லாமல் விவசாயிகளின் கஷ்ட நிவர்த்திக்காக, சில குறித்த கொள்கைகளின்படி, அரசாங்கமானது மிகவும் பொருள் உதவி செய்தது. விவசாயிகளில் நூற்றுக்கு 67

பேருக்குமேல் இவ்விதப் பண உதவியைப் பெற்றனர்.

அடைமானக் கடன்களைச் சரியான வட்டிக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும், கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் குறுகிய காலக் கடனாக மாற்றக் கூடாது.

அடைமானக் கடன் கம்பெனிகள், விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருந்தன. அக்கம்பெனிகள் சட்டப்படி குறைந்த வட்டியே வாங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டன. மேலும், பழைய தவணை நியதியின்படி அவைபணத்தை வசூலிக்கக் கூடாதென உத்தரவிடப்பட்டது. அதனால், அந்தக் கடன் கம்பெனிகளுக்குக் கஷ்டம் உண்டாகும் அல்லவா? அதை நிவர்த்திப்பதற்காக அரசாங்கமானது அந்தக் கம்பெனிகளுக்குக் கடன் கொடுத்து உதவியது.

1933ல் இரண்டு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளின்படி ஸ்தாவரப் பொருளின்மேல் (Immovables) கொடுக்கப்பட்ட கடனுக்கு நூற்றுக்கு 4 வட்டிக்கு மேல் வாங்கக் கூடாது. கடன் கொடுத்த சங்கங்கள் தங்களிடத்தில் 4 வட்டிக்கு மேல் அதிக வட்டிக்கு எழுதிக் கொடுத்த பத்திரங்கள் இருந்தால், அவைகளை 4 வட்டிப் பத்திரங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஸ்தாவர சொத்தின் மேலுள்ள கடனுக்கு நூற்றுக்கு 4 வட்டிக்கு மேல் கொடுக்கவும் கூடாது; வாங்கவும்

கூடாது. ஆனால், இந்த இரண்டு சட்டங்களும் உடனே முழுதும் அமுலுக்கு வரவில்லை.

மிகவும் தொந்தரவான கடன்களைக் குறைந்த வட்டிக் கடனாக மாற்றுவதற்கு அரசாங்கம் பண உதவி செய்ய முன் வந்தது. அப்படி அரசாங்கம் கொடுக்கும் கடனை 1942-ஆம் வருஷம் ஜனவரி மாதம் வரையில் கொடுக்க வேண்டுவதில்லை; பிறகு கூடப் பல தவணையில் கொடுக்கலாம்; வட்டியை முதல் இரண்டு வருஷங்களுக்கு நூற்றுக்கு $1\frac{1}{2}$ வீதமும், பிறகு $4\frac{1}{2}$ வீதமும் சௌகரியப்படும் போது கொடுக்கலாம்.

இப்படி அரசாங்கத்தினிடம் கடன் வாங்க வேண்டுமானால், அந்த விவசாயி 1933ஆு ஜனவரி மாதத்திற்கு முன்னே நிலத்துக்குச் சொந்தக்காரனாய் இருக்க வேண்டும். அந்த நிலத்தின் மேலுள்ள கடனானது, நிலத்தின் அடைமான மதிப்புக்கு மேல் நூற்றுக்குப் பத்துப்பங்கு அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுகூட அடைமான மதிப்பில் நூற்றுக்கு 25 வீதந்தான் கடன் கொடுக்கப்படும். அதற்கும் நிலத்தின் மதிப்பில் நூற்றுக்குப் பத்துப் பங்கு அளவாவது அடைமானமாக வைக்க வேண்டும்.

இவ்வாறான பலவித முயற்சிகள் செய்யப்பட்டமையால், டென்மார்க்குத் தேச விவசாயிகளின் நிலைமை மேம்பட்டிருக்கிறது.

## 6. நார்வே

இந்தத் தேசத்தில் பெரும்பாலான கடன்கள் அடைமானக் கடன்களே. அநேகமாகச் சிறு விவசாயிகளின் கடனே மிகவும் அதிகமாய் இருக்கிறது.

1934-ஆம் வருடச் சட்டப்படி விவசாயக் கடன் பாங்கி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந்தப் பாங்கிக்கு இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று கடன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக இருப்பது; மற்றொன்று அதிக வட்டிக் கடன்களைக் குறைந்த வட்டிக் கடன் ஆக்குவது. அப்படிக் குறைந்த வட்டிக் கடன் ஆக்குவதைச் சம்மதத்தின் பேரிலும் செய்யலாம்; கட்டாயத்தின் மேலும் செய்யக்கூடும்.

விவசாயி தன் நிலத்தை இழந்துவிடுவான் போலத் தோன்றினல், பழங்கடனைத் தீர்ப்பதற்காகக் கடன் கொடுக்கப்படும். மேலும், அந்த விவசாயி கடன் கொடுத்த பிறகு, நல்ல நிலைமை அடைவதற்காகப் பயிர்ச் செலவுக்கும் அவனுக்குக் கடன் கொடுகப்படும். ஒருவனுக்கு அவன் குடும்பத்திற்கு வேண்டிய அளவுக்கு மேல் அதிகமான அளவு நிலம் இருந்தால், குடும்பத்துக்கு வேண்டிய அளவு நிலத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்குத்தான் அவனுக்குக் கடன் கொடுக்கப்படும். அப்படிக் கொடுக்கப்படும் கடனும் அந்த விவசாயியின் சொத்து மதிப்பில் நூற்

றுக்கு 20 பங்குக்குமேல் அதிகமாகக் கொடுக்கப்படாது.

மேல் கூறப்பட்ட விவரங்களின்படி சாதாரணமாகச் சமரச ஏற்பாடு உண்டாகாவிட்டால், கட்டாயக் கடன் குறைவை அரசாங்க இலாக்கா உண்டாக்கலாம்.

உயர்ந்த வட்டியிலிருந்து குறைந்த வட்டிக்கு மாற்றும் கடனனது, கடுவட்டி கொடுக்க முடியாது கஷ்டப்படுகிற விவசாயிகளுக்குத்தான் கொடுக்கப்படும்.

## 7. ஸ்வீடன்

இந்தத் தேசத்தில் விவசாயிகளின் கடன் விவசாயியின் சொத்து 100 ஆனல் 41·6 வீதம் இருக்கிறது.

1932–ஆம் வருஷ முதல் 'உடன்படிக்கைக் கடன்கள், உதவிக் கடன்கள்' என்ற இரண்டுவிதமான கடன்களை அரசாங்கம் கொடுத்தது. உடன்படிக்கைக் கடன் சட்டப்படி கடன் கொடுத்தவர்கள் நூற்றுக்கு எழுபது வீதம் தங்களுக்கு உரிய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் என விதிக்கப்பட்டது. உதவிக் கடன்கள் வாங்குபவர்கள் அந்தத் தொகையைச் சர்க்காரிடம் அதற்கு முன் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க உபயோகப்படுத்தாமல், வேறு கடன்களைக் கொடுப்பதற்கு உபயோகப்படுத்த வேண்டும்.

1935ல் ஓர் அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கடன்காரரோடு முடிவான உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்வதானால், 800 கிரவுனுக்கு அதிகப்படாத தொகையை அரசாங்கம் கொடுக்கலாம். நிலத்தைக் கட்டாய விற்பனைக்குக்கொண்டு வந்திருந்தால், அப்போது கடனாளியின் ஸ்தாவர சொத்தின் மதிப்பில் 100க்கு 30 விகிதத்திற்கு மேற்படாத கடனைக் கொடுக்கலாம். அந்தக் கடனுக்கு முதல் இரண்டு வருஷங்கட்கு வட்டி இல்லை. பிறகு நான்கு மேனிக்கு வட்டி உண்டு.

அரசாங்கம் அளித்த உதவிகளாலும், அந்தத் தேசத்தில் விவசாயப்பொருளின் விலை உயர்ந்ததாலும், விவசாயிகளின் கஷ்டம் கொஞ்சங் குறைந்துவிட்டது.

## 8. பின்லாந்து (Finland)

இந்தத் தேசத்தில் பயிர்ச் செலவுக்காக விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது தவித்தார்கள். விவசாயிகளின் கடனில் நூற்றுக்கு 20 பங்குதான் நீண்ட நாளைய கடன்; மற்றவை குறுகிய காலத்தில் கொடுபட வேண்டிய கடன்.

ஆகையால், சர்க்கார் முதல் முதல் குறுகிய காலக்கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றுவதென நிச்சயித்தது.

அந்தத் தேச நில அடைமானப் பாங்கிச் சட்ட திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. பாங்கியின் மூலதனம் அதிகமாக்கப்பட்டது. அதற்கு அரசாங்கமும் விசேஷ உதவியைச் செய்தது. விவசாயிக்குப் பாங்கியானது, அவனது ஸ்தாவர சொத்தின் மேல் நூற்றுக்கு 70 பங்கு வீதமும், சங்கம (Movables) சொத்தின் மேல் 100க்கு 30 பங்கு வீதமுமாகக் கடன் கொடுக்கலாமென விதி ஏற்படுத்தப்பட்டது. அதுவும் போதாதெனக் காணப்பட்டது. ஆகவே, ஸ்தாவர சொத்தின் மேல் 100க்கு 90 வீதம் கடன் கொடுக்கலாமென விதிக்கப் பட்டது. ஏதாவதொரு விவசாயியின் நிலமானது ஏல விற்பனைக்கு வந்தால், அதைப் பாங்கி வாங்கி, நிலத்தின் பழைய சொந்தக் காரனுக்கே கொடுக்க வேண்டும்.

விவசாயக் கடன்களை ஒன்று சேர்க்கும் வேலையையும் ஷை பாங்கி செய்து வந்தது.

1934-ஆம் வருஷச் சட்டப்படி, கட்டாயக் கடன் விற்பனைக்கு வரும் நிலத்தையெல்லாம் பாங்கியே வாங்குவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

அப்படி நிலத்தை வாங்கும்போது, கடன் கொடுத்தவனுக்குப் பாங்கி பணம் கொடுக்க வேண்டுமென்பது இல்லை. அந்தத்தொகைக்கு அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்படும் பாண்டுகளை (உறுதிச் சீட்டுகளை)க் கொடுக்கலாம்.

அல்லது கடன் கொடுத்தோர் விரும்பினால், 1935-ஆம் வருஷத்திற்குள் கேட்க முடியாத கடனைக் குறைந்த வட்டிக்குப் பாங்கியில் போட்டு வைக்கலாம்.

1930ல் மற்றொரு சட்டம் உண்டாக்கப் பட்டது. அதன்படி காடுகளின் பேரிலும் நீண்டகாலக் கடனை மேற்கண்டபடி பெறலாம் என ஏற்பாடு செய்யப்பட்டது.

1932ஆம் பிப்பிரவரிமீ சட்டப்படி கடன் கொடுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற் பாட்டிற்கு மற்றவர்களையும் கட்டுப்படுத்தச் சட்டம் உதவி செய்தது.

1932ஆம் ஏப்பிரல்மீ சட்டப்படி விவசா யத்திற்கு அவசியமான கருவிகளை (உழவுக் கருவிகளை) ஜப்தி செய்யக் கூடாதென ஏற் பாடு செய்யப்பட்டது.

## 9. ஜப்பான்

சமீப காலத்தில் ஜப்பான் தொழிலில் மிகவும் விருத்தியடைந்திருக்கிறது; மற்றைய தேசங்களைப்போல முன்னணியில் நிற்கிறது. ஆனால், அந்தத் தேசத்தின் தொழில்களைப் போல விவசாயம் அவ்வளவு மேன்மையை அடையவில்லை.

அதற்கு முக்கிய காரணம் ஜப்பானியரில் பெரும்பாலாருக்கு மிகவும் சிறிதளவு நிலமே இருக்கிறது. மேலும், அந்தத் தேசத்தின்

மொத்த விஸ்தீரணத்தில் நூற்றுக்குப் பதினறு பங்கே விவசாயத்திற்குப் பயன் உள்ளதாய் இருக்கிறது.

மேலும், பட்டின் விலை (Silk) குறைந்து விட்டது. ஜப்பானின் முக்கிய விளை பொருளான அரிசியை விற்பதற்கான இடம் (Market) கிடைக்கவில்லை. விவசாயத்திற்கான பொருள்களின் விலை ஏறி நிற்கிறது. இக் காரணங்களால் ஜப்பானிய விவசாயி கஷ்டம் அடைகிருன். பெரும்பாலான விவசாயக் கடன்கள் நூற்றுக்கு 10 வட்டி வீதம் வாங்கப் பட்டவை. சில 12 முதல் 15 வீதம் வரையில் வட்டிக்கு வாங்கப்பட்டவை. வேறு சில இன்னும் அதிக வட்டிக்குக்கூட வாங்கப்பட்டவை.

அரசாங்கம் கடன் ஏற்பாட்டுச் சங்கங்கள் பலவற்றைப் பல கிராமங்களிலும் ஏற்படுத்தியது. இந்தச் சங்கங்கள் தங்களுக்குள்ளேயே கடன் சமரசத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; நாளடைவில் கடன் ஈடாதற்கான ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

இந்தச் சங்கங்கள் கடன் கொடுத்தவர்களையும் வாங்கியவர்களையும் ஒன்று கூட்ட வேண்டும்; வட்டி முதலில் பெருந்தொகையைத் தள்ளுபடியாக்க வேண்டும்; வட்டியைக் குறைக்க வேண்டும்; வருஷா வருஷம் எவ்வளவு வீதம் அந்தக் கடன் கொடுபட்டு அடை

பட வேண்டும் என்ற விஷயத்தையும் நிச்சயிக்க வேண்டும்.

சாதாரணமாக இந்த முறையில் சமரசம் ஏற்படாவிட்டால், கம்யூனல் கமிட்டிகளுக்கு (Communal Committees: நம் நாட்டு ஜில்லாக் கமிட்டியை ஒத்தவை) தெரிவித்து, அவைகளை ஓர் ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். அதுவும் முடியாமற் போனால், 1932-ஆம் வருஷச் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டு, கடனாளிகள் தங்கள் சௌகரியத்தைத் தேடிக்கொள்ளலாம்.

## 10. கனடா (Canada)

1934ஞு சமரசத்திற்காகவும், ஏற்பாடுகட்காகவும் முதல் முதல் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் கடன் மாற்றம் (Conversion of debt) செய்தற்காகக் கமிட்டி நியமிக்கப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் (கோர்ட்டார் பிரிவின்படியுள்ள ஜில்லா) அபிஷியல் ரிஸீவர் (Official receiver) நியமிக்கப்பட்டார்.

பணம் கொடுக்க முடியாத விவசாயி அந்த ஜில்லாவிலுள்ள அபிஷியல் ரிஸீவரிடம் சென்று, தனக்குள்ள சொத்து விவரங்களையும், கொடுக்க வேண்டிய கடன் விவரங்களையும் எழுதித்தர வேண்டும். அதையல்லாமல், தான் விரும்புவது கடன் தொகையைக் குறைக்க

வேண்டுமென்பதா, அல்லது கடனைக் கொஞ்ச காலம் கழித்துக் கொடுக்கலாமென அநுமதிப் பதா என்பதைப்பற்றி அந்த விவசாயி மனுச் செய்துகொள்ள வேண்டும். அந்த ஏற் பாட்டைக் கடன் கொடுத்தவர்கள் ஒப்புக் கொண்டால், அவ்விஷயம் முடிவாகி, கோர்ட் டில் பதிவு செய்யப்படும். அப்படிக் கடன் கொடுத்தவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், மாற்றுங் கமிட்டியார் (Committee of revision) தங்கள் இஷ்டப்படி என்ன ஏற்பாட்டை வேண்டுமானாலும் செய்யலாம். அது அந்தக் குறித்த விவசாயியின் எல்லாக் கடன்காரரை யும் கட்டுப்படுத்தும். இந்தச் சட்டத்தின் முக் கிய நோக்கம் கடன் தொல்லையிலிருப்பவர் கள் அந்தக் கஷ்டத்திலிருந்து சற்று விடுதலை யாகி, விவசாயத்தைச் செவ்வையாகச் செய்ய வேண்டுமென்பதேயாகும்.

டொமினியன் பார்ம் கடன் போர்டார் (சம உரிமை நாட்டுப்பண்ணைக் கடன் குழு: **Dominion Farm Loan Board**) எந்த விவசாயிக் கும், அவனுடைய நில மதிப்பில் நூற்றுக்கு 50 முதல் 60 வரையில் கடன் கொடுக்கலா மென உத்தரவிடப்பட்டது. விவசாயியான வன் தன் தொழிலை நடத்துவதற்கு உதவியாக, இரண்டாவது அடைமானத்தின் பேரில் கூட, ஷை போர்டார் கடன் கொடுக்கலாமென அநு மதி தரப்பட்டது.

சட்டப்படி எந்த அடைமானத் தொகையை யும் எப்போது வேண்டுமானாலும் கொடுத்துத் தீர்த்துவிடலாம். அப்படிக் கொடுக்கும்போது, கடன் கொடுத்தவன் அந்தப் பணத்தை வாங் கிக்கொள்ள மறுத்தால், அந்தச் சமயம் முதல் அந்தக் கடன் தொகைக்கு வட்டி 5 க்கு மேல் கிடையாது.

## 11. அமெரிக்க ஐக்கிய நாடுகள் (United States of America)

கடந்த மகா யுத்தத்தின்போது அமெ ரிக்காவானது, சண்டை செய்துகொண்டி ருந்த தேசங்களுக்குப் பல விதப் பொருள்களை யும் அனுப்பியது. திடீரென அபரிமிதமான விளை பொருள்களை உண்டாக்க நேரிட்ட தால், காடுகளைத் திருத்தி, உழு நிலங்களாக மாற்ற வேண்டி வந்தது. மேலும், விளை பொருள்களின் விலை அதிகமாகவே இருந்த படியால், பல அமெரிக்க உழவர்கள் நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்கினார்கள்.

விலை விழ ஆரம்பித்ததில் அந்த விவ சாயிகளின் பாடு கஷ்டமாய்ப் போய்விட்டது. நிலங்களிலிருந்து வரும் வரும்படியை விட அந்த நிலங்களின் மேலிருந்த கடன் தொகை அதிகமாய் இருந்தது.

1933ஆம் பண்ணைக் கடன் ஆட்சி (The Farm Credit Administration) என்ற ஒரு

ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஸ்தாபனம் செய்யவேண்டிய வேலைகள் இரண்டு (1) முதலாவது ஒன்றுபட்ட பல கடன் கொடுக்கும் ஸ்தாபனங்களை சாசுவத நிலையில்வைத்து, விவசாயிகட்கு எவ்வளவு குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கலாமோ அவ்வளவு வட்டிக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வது. (2) வியாபார மந்தத்தால் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து சமாளித்துக்கொள்ளுவதற்கான கடனைக் கொடுத்து விவசாயிகளுக்கு நன்மை செய்வது.

இந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்ட பிறகு பெடரல்(Federal)நில பாங்கிகளும், நில பாங்கிக் கமிஷனரும் கொடுத்த கடன் தொகை மிகவும் அதிகம் ஆயிற்று.

அனேக விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தோர் தாமாகவே தமக்குச் சேர வேண்டிய தொகையைக் குறைத்துக்கொண்டனர். அப்படி அவர்கள் குறைத்துக்கொண்ட தொகை நூற்றுக்கு 25 பங்காய் இருந்தது.

நில அடைமானக் கடனுடைய வட்டி விகிதம் குறைக்கப்பட்டது. புதிதாகக் கடன் வாங்குபவர்கட்கும், பழங்கடன் கொடுப்பவர்களுக்கும் இது மிக்க நன்மையைத் தந்தது.

வட்டி குறைக்கப்படுவதற்கு முன்பு, ஒருவனுடைய வரும்படியில் பெரும்பங்கு வட்டி

கொடுப்பதற்கெனப் போய்விடும். ஆனல், இப்போதோ, அப்படி இல்லை.

1933-ஆம் வருஷம் ஜூலை மாதம் வட்டியானது நூற்றுக்கு $4\frac{1}{2}$ வீதம் குறைக்கப்பட்டது. 1935-ஆம் வருஷம் ஜூலை முதல் அது $3\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

1933-ஆம் வருஷத்துக்கு முந்தி வாங்கிய கடன்களையும், அல்லது அதற்குப் பின் இரண்டு வருஷத்தில் சர்க்கார் கொடுத்த கடனையும் திருப்பிக் கொடுக்க வேண்டிய வாய்தாவைத் தள்ளிப் போடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத விவசாயிகளுக்குச் சில பாங்கிகளும், வாய்தாவை ஒத்தி வைத்து, உதவி செய்தன.

1934-ஆம் வருஷத்துக்குப் பின், விலைவாசி சற்று ஏறியதால்,விவசாயிகளின் நிலைமை சற்றே மேன்மை அடைந்தது.

கடன் ஏற்பாட்டுக்கான கோர்ட்டுகள் (Debt Adjustment Courts)நியமிக்கப்பட்டன. அந்தக் கோர்ட்டுகளே ஒரு விவசாயிக்கு உதவி செய்யலாமா கூடாதா, விவசாயி தன் தொழிலைச் சரியாக நடத்துவாரு என்பவைகளை ஆராய்ந்து, விவசாயிகளுக்குக் கடன் உதவி தர உத்தரவளிக்க வேண்டும். கோர்ட்டு அப்படிச் செய்ய உத்தரவளிக்காவிட்டாலும் ஏழு வருஷ காலம் வரையில் விவசாயி மேற்கண்ட உதவியைப் பெறலாம்.

1935-ஆம் வருஷக் கடன் சட்டத்தின்படி (Credit Act) 1 கோடியே 20 லட்சம் பவுன் வரையிலும் அரசாங்கமானது கடன் வாங்கி, விவசாயிகள் கடன்காரர்களோடு செய்து கொள்ளும் ஏற்பாட்டிற்கு ஒத்தாசை செய்யலாமென நிச்சயிக்கப்பட்டது.

## 12. பல்கேரியா (Bulgaria)

இந்தத் தேச விவசாய மக்கள் சிறு சிறு நிலத்தை உடையவர்கள். ஒவ்வொரு விவசாயியும் தன் நிலத்தைத் தன் பெண்டு பிள்ளைகளின் உதவியைக் கொண்டு பயிரிடுகிறான். இந்த நாட்டு விவசாயிக்குப் பழைய வழக்க முறைகளில் நம்பிக்கையும் அபிமானமும் மிகவும் உண்டு. மேலும், விவசாயத்தை விருத்தி செய்வதற்கான பணச் சௌகரியமும் அவர்களுக்கு இல்லை.

இந்த நாட்டிலே கூட்டுறவு இயக்கம் பல துறைகளிலும் வலுவடைந்து இருக்கிறது. ஆனால், அச்சங்கங்களால் விவசாயியின் நிலைமையை அதிகமாக மேம்படுத்த முடியவில்லை.

1930-ஆம் வருஷத்துக்குப் பின்பு அரசாங்கத்தார் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு இருந்தன. ஒன்று கடனால் மூடப்பட்ட விவசாயியைக் காப்பாற்றுவது ; மற்றொன்று விவசாயத்தில் தகுந்த மாறுதல்களைச் செய்து, அதை இலாபகரமாகச் செய்வது.

1934ல் ஏற்பட்ட கட்சி அரசாங்கமானது மூன்று வகையான திட்டங்களைக் கைக்கொண்டது: (1) முக்கியமான விவசாயப் பொருள்உற்பத்திக்குத் தகுந்த பாதுகாப்புகளைத் தருவது; (2) விவசாயப் பொருள்களை நன்றாக விற்பனை செய்வதற்கான உதவிகளைப் புரிவது; (3) பொதுவாக எல்லோருக்கும், முக்கியமாக விவசாயிகளுக்கும் குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும்படி செய்வது.

விவசாயிகளின் கடன் தொல்லையைக் குறைப்பதற்கான வேலை 1932-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதத்திலேயே செய்யப்பட்டது. அந்த வருஷச் சட்டப்படி, கடன் கொடுக்க வேண்டிய தவணையை ஒத்தி வைத்தல், வட்டி விகிதத்தைக் குறைத்தல், கடன் முதலைக் கூடக் குறைத்தல் முதலிய வழிகளின் மூலமாக, விவசாயிகட்கு நன்மை செய்யப்பட்டது.

1934-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் இன்னும் நல்ல முறையில் ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

அந்தச் சட்டப்படி விவசாயிகளின் கடன் தொகை எவ்வளவு குறைக்கப்படுகிறதோ அவ்வளவு தொகையையும் கடன் கொடுத்தவர்களுக்கு அரசாங்கத்தாரே கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டனர். விவசாயியின் கடன் குறைந்த தொகையாய் இருந்தால், அதை நூற்றுக்கு 40 வீதமும் பெரிய

தொகையாய் இருந்தால் நூற்றுக்கு 35 வீதமும் குறைக்கலாமென்று சட்டம் விதிக்கப் பட்டது. தொழில் வரி மூலமாகவும், மொத்த வரும்படியின் மேல் விதிக்கப்படும் உப வருமான வரி மூலமாகவும் அரசாங்கத்துக் குக் கிடைக்கும் வருமானம், தனியாகப் பல் கேரியா நேஷனல் பாங்கியில் விட்டு வைக்கப் பட்டது. அந்தப் பணத்திலிருந்து, விவசாயி களின் கடனைக் குறைவுபடுத்துவதால் ஏற்படு கிற தொகை கொஞ்சங் கொஞ்சமாகக் கடன் கொடுத்தவர்கட்குக் கொடுக்கப்பட்டது.

விவசாயிகளின் கடனுக்காக ஓரளவு சொத்தை எந்தக் காரணத்தாலும் ஜப்தி செய் யக்கூடாதென்று முன்னே சட்டம் இருந்தது. இப்போது அந்தச் சொத்தின் அளவு அதிக மாக்கப்பட்டது.

இன்னும் செய்யப்பட்ட நன்மைகளா வன :—

1. கடன் தொகை கொடுக்கும் தவணை களை, இன்னும் அதிகமான வருஷங்களில் கொடுக்கும்படி அதிகப்படுத்தல்.

2. கடன் கொடுக்க வேண்டிய வாய் தாவை, 2 முதல் 10 வருஷம் வரையிலும், சில சமயங்களில் 15 வருஷம் வரையிலுங்கூட ஒத்தி வைத்தல்.

3. மொத்தத் தொகையை வருஷம் ஒன் றுக்கு இவ்வளவு கொடுப்பதென ஏற்பாடு

செய்தால் (Amortisation Instalments) அதை இரண்டு வருஷம் வரையில் கொடுக்காமல் இருத்தல்; அந்த இரண்டு வருஷம் வரையில் வட்டி கூடக் கொடாமல் இருத்தல்.

4. வட்டியை நூற்றுக்கு 5 விகிதமாகக் குறைத்தல்.

கடனாளியின் சொத்து நிலைமை, வரும்படி முதலியவைகளைக் கவனித்து, கடன் வாய்தாவை அந்தத் தேசத்திலே தள்ளிப் போடுகிறார்கள்.

சில தனிச் சட்டங்களின் மூலம் கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கியவர்கள் இவர்களினிடையே சமரசஏற்பாடு உண்டாக்க முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

1935-ஆம் வருஷம் மார்ச்சு மாதச் சட்டம் லேவாதேவிக்காரரை அடக்க ஏற்பட்டது. அந்தச் சட்டப்படி குறுகிய காலக் கடனுக்காவது, நில அடைமானக் கடன்களுக்காவது பல்கேரியாவின் நேஷனல் பாங்கியின் (Rate of Discount) வட்டிக்கு மேல் நூற்றுக்கு மூன்று வீதத்திற்குமேல் வாங்கக் கூடாது என்று வரையறுக்கப்பட்டது.

விவசாய பாங்கிகள் கொடுக்கும் கடன்களுக்கும் வட்டியானது படிப்படியாக மிகவும் குறைக்கப்பட்டது.

## 13. கிரீஸ் (Greece)

வியாபார மந்தம் ஏற்படுவதற்கு முன்பே இந்தத் தேச விவசாயம் அவ்வளவு நல்ல நிலைமையில் இல்லை. அதற்குக் காரணம், கடந்த மகா யுத்தத்திற்குப் பிறகு அநேக குடும்பங்கள் கிரீஸுக்குத் திரும்பிப் போய் அந்த நாட்டிலேயே குடியேற வேண்டி நேரிட்டதாகும். மேலும், விவசாயிகட்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கத் தக்க ஸ்தாபனங்கள் அந்த நாட்டில் அதிகமாய் இல்லை.

1930ஞு ஒரு கடன் வாய்தா ஒத்தி வைப்புச் சட்டம் விதிக்கப்பட்டது. அதன்படி ஜட்ஜுகள் விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடனுக்கு 5 வருஷ வாய்தா தர வேண்டுமெனவும், வருஷா வருஷம் எவ்வளவு கொடுத்தால் போதுமென நிச்சயிக்க வேண்டுமெனவும் ஏற்பாடு செய்யப்பட்டது. விவசாய பாங்கிகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் இந்தச் சட்டத்தில் கட்டுப்படவில்லை.

1933ஞு சர்க்கார் விவசாயிகளின் கடன் தொகையைக் கணக்கிடக் கமிஷனர்களை நியமித்தது. சில விசேஷமான சட்டங்களையும் உண்டாக்கிற்று :—

1932-ஆம் வருஷச் சட்டம் ஒன்றின்படி சாகுபடி நிலம், புகையிலைத் தோட்டம், திராக்ஷைத் தோட்டம், இவைகளில் ஒரு

குறித்த குறைந்த அளவுள்ள நிலத்தை ஜப்தி செய்யக்கூடாதென விதி ஏற்பட்டது.

விவசாயச் சீர்திருத்தத்தால் நன்மையை அடையாத விவசாயிகள், வருஷக் கட்டணத்தை 25 வருஷத்தில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துகொள்ளலாம். அந்த வருஷக் கட்டணங்களின் வட்டி 8 முதல் 6 சத விகிதம் தான்.

1933-ஆம் வருஷத்தில், வெளி நாட்டிலிருந்து வந்து கிரீஸ் தேசத்தில் அரசாங்க உதவியால் குடியேறியவர்களான (Refugees) விவசாயிகட்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகை நூற்றுக்கு 40 வீதம் குறைக்கப்பட்டது. அதன் மேலுள்ள வட்டித்தொகையும் 8 வீதத்திலிருந்து 3 வீதமாகக் குறைக்கப்பட்டது.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானல், விவசாய பாங்கியானது விவசாயிகளின் பணமுடையை மிகவும் குறைத்துவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

## 14. ஹங்கேரி (Hungary)

இந்தத் தேசத்திலும் நடுத்தரமான மிகச் சிறிய விவசாயிகளே கடனல் மிகவும் துன்பப்பட்டவர்கள். மொத்தச் சாகுபடி நிலத்தில் நூற்றுக்கு 30 பங்கு நிலம் கடனில் முழுகி இருந்தது. சிறு விவசாயிகளின் விஷயத்தில் அவர்

களின் கடன் விடுதலையானது சமூகத்துக்கே முக்கிய பிரச்சினையாய் இருக்கிறது. கடன் கொடுத்தவர், வாங்கியவர் இருவரையும் ஒன்று சேர்த்துச் சமரசத்தை உண்டாக்கி, செயற்கையால் (இயற்கையாக அல்லாமல்) நில விலை மிகவும் குறைந்துவிடுதல் முதலிய காரியங்களைப்பற்றி அரசாங்கமே ஏற்பாடு செய்வதென நிச்சயப்படுத்தப்பட்டது.

1930-ஆம் வருஷத்தில் அரசாங்கமானது விவசாயிகளின் கடன் தொல்லையை நிவர்த்தி செய்ய முதல் முதல் சட்டம் விதித்தது. விவாகக் கடனில் (Matches Loan) கொடுபட்ட தொகை போகப் பாக்கிப் பணத்தைச் சிறு நிலங்களின் பிரிவினை, விவசாயிகளின் நிலம் ஏல விற்பனைக்கு வந்தால் அதைக் காப்பாற்றுதல் முதலிய காரியங்களுக்காகப் பயன்படுத்தும்படி ஒரு கமிட்டியாரை நியமித்தது. 1931 ஃ அந்தக் கமிட்டிக்குப் பதில், விவசாயக் கடன் ஏற்பாட்டுக்கான நேஷனல் கமிட்டி ஒன்று நியமிக்கப் பட்டது. அந்தக் கமிட்டியாருக்குத் தெரியப்படுத்திய கடன் நிலங்கள் ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்த அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதக் காலத்திற்குள் அந்த நிலத்தை ஏல விற்பனைக்குக் கொண்டு வருதல் கூடாது. பிறகு, 1932 ஃ அக்டோபர் மாதம் வரையில் மேற்கூறிய சொத்துகளை ஏலவிற்பனைக்குக் கொண்டு வரக்கூடாது.

1932ஆம் சர்க்கார் உத்தரவுகள், விவசாயி உண்மையிலேயே தன்னாலான வரையில் கடனைத் திருப்பிக் கொடுக்க முயன்றிருந்தானானால், அந்த விவசாயிக்குச் சில நன்மைகளைச் செய்து தந்தன.

சில விவசாயிகளின் சொத்துகளின் மேலுள்ள கடனுக்கு அரசாங்கமே வட்டித் தொகையைக் கொடுத்து உதவி செய்யலாமெனவும் விதி ஏற்படுத்தப்பட்டது.

1933-ஆம் வருஷத்திய ஓர் உத்தரவின்படி தற்காலீகமான ஓய்வு (Truce) உண்டாகும்படி செய்ய முடியும். அந்த ஓய்வானது 1934-35-ஆம் வருஷங்களில் அமுலில் இருக்கும். மேலும், அந்த உத்தரவின்படி விவசாயக் கடன் வட்டி விகிதமானது மிகவும் குறைக்கப்பட்டது. சட்டப்படி விவசாயக் கடனுக்கு நூற்றுக்கு $5\frac{1}{2}$ விகிதத்திற்கு மேல் வட்டியை வாங்கக் கூடாது.

ஒரு விவசாயி சர்க்காருக்கு மனுச்செய்து கொண்டால், காப்பாற்றப்பட்ட சொத்துகளுக்கு உள்ள சௌகரியங்கள் அவன் சொத்துக்கு செய்து கொடுக்கப்படும்.

ஒரு விவசாயிக்கு நிலத்திலிருந்தே வரும்படி வந்தாலும், அல்லது ஒருவன் விவசாயத் தொழிலாளியாய் இருந்து அதைக் கொண்டு பிழைப்பை நடத்தி வந்தாலும், ஒரு குறித்த அளவு நிலத்தை ஜப்தி ஏலம் முதலி

யவைகட்குக் கொண்டு வராமல் தடுத்தற்காகக் 'காப்பாற்றப்பட்ட நிலமாக'ப் பதிவு செய்து கொள்ளலாம். இப்படிக் காப்பாற்றப்பட்ட நிலத்தின் சொந்தக்காரன் குறைந்த வட்டியைக் கொடுக்கலாம். கொடுக்க வேண்டிய மொத்தத் தொகையில் நூற்றுக்கு ஒன்று வீதம் நீண்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கும் ஏற்பாட்டை (Amortisation instalment of 1 percent) உண்டாக்கிக்கொள்ளலாம்.

ஒரு குறித்த அளவு நிலத்துக்குமேல் அதிகமான அளவு நிலமுடைய ஒரு விவசாயியின் கடனை எப்படி ஏற்பாடு செய்துகொள்ளலாமென்பதைப் பற்றிய விதிகள் அந்த உத்தரவில் காணப்படுகின்றன. அதல்லாமலும், ஒரு குறைந்த அளவு நிலத்திற்குமேல் அதிகமல்லாத நிலத்தை வைத்திருந்தானேல், அவனுடைய கடனை எவ்வளவு குறைக்கலாமென்பதைப் பற்றிய விதிகளும் அந்த உத்தரவுகளிற் காணப்படுகின்றன.

இவ்வாறு காப்பாற்றப்பட்ட சொத்துகளால் கடன் கொடுத்தவர்களுக்கும், அரசாங்கத்துக்கும் கஷ்டம் உண்டாகுமல்லவா? அதை நீக்க அரசாங்கத்தாரே ஆங்காங்குள்ள கமிட்டிகளின் மூலம் இவ்விஷயங்களைக் கவனித்து வந்தனர்.

கடன் கொடுத்த ஸ்தாபனங்களுக்கு விவசாயிகளின் கடன் வட்டித் தொகையைக்

குறைத்ததால் உண்டாகும் கஷ்டத்தை நீக்கு வதற்காகச் சர்க்காரே பண உதவி செய்தது.

இந்த அதிகப்படியான செலவுக்கெல் லாம் வேண்டிய பணத்தைச் சர்க்கார் ஹங் கேரி பாங்கியிலிருந்து பெற்றுக்கொண்டது.

சர்க்காரும் தங்களுக்குரிய நில வரியை விவசாயிகள் 5 வருஷத்தில் கொஞ்சம் கொஞ்ச மாகக் கொடுத்து அடைக்கலாமென்ற விதியை ஏற்படுத்திற்று. கடன் பட்டவர்க ளுக்கும் அதே விதச் சௌகரியம் செய்து கொடுக்கப்பட்டது. காப்பாற்றப்பட்ட சொத் துகள் பேரில் விதித்த நில வரியை 10 வருஷ காலத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து அடைத்துவிடலாமெனவும் ஏற் பாடு செய்யப்பட்டது.

கடன் வாய்தாவை ஒத்தி வைத்தபடியால், விவசாயிகள் தங்கள் பயிர்ச்செலவுக்கு வேண் டிய கடனைப்பெறுவதற்குக் கஷ்டமாய் இருந் தது. அதனல் கடன் ஒத்தி வைப்பு முறையில், பயிர்ச் செலவுக்காக வாங்கிய கடன் சேர்க்கப் படவில்லை.

வேறு சில அரசாங்க உத்தரவுகளால் அதிக மதிப்புள்ள சொத்துகளின்மேலேற் பட்ட கடனைச் சமரசமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டது. குறைந்த சொத்துகளின்மேலேற் பட்ட கடனில் அரசாங்கமானது ஒரு பகுதி

யைத் தானே கொடுத்துவிடுவதாக ஏற்றுக் கொண்டது. சில சொத்துகள் மேலிருந்த கடனைக் கொஞ்சம் கொஞ்சமாக 50 வருஷத்தில் கொடுக்கலாமெனவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாருகப் பல வழியாலும் அரசாங்கம் உதவி செய்தபடியாலும், விவசாயப் பொருள்களின் விலை சற்று உயர்ந்ததாலும், விவசாயிகளின் நிலைமை மேன்மைப்பட்டது.

## 15. போலந்து (Poland)

வியாபார மந்தம் உண்டான பிறகு, விவசாய விளை பொருள்கள், செய் பொருள்கள் இரண்டின் விலையும் குறைந்துவிட்டது. அதனல் விவசாயம் இலாபம் தராத காரிய மாகிவிட்டது. நில விலை மிகவும் இறங்கிவிட்டது.

1932ஹு விவசாயிகளின் கடன் ஒழிப்புக்காகச் சில ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன. அவைகளை 1933-ஆம் வருஷம் மார்ச்சு மாதச் சட்டங்கள், விசேஷமான சௌகரியம் தருபவைகளாக ஆக்கின.

இந்த நாட்டு ஏற்பாட்டின்படி, விவசாய நிலங்கள், அவைகளின் மேலுள்ள கடனுக்குத் தக்கவாறு ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டன :

(1) அரசாங்கத்துக்கும் வேறு பொது ஸ்தாபனங்களுக்கும் கொடுக்க வேண்டிய கடன் பாக்கியை உடையவை

(2) விவசாயக் கடன் நிதி நிலையங்களுக்கு (Agricultural Credit Institutions) நீண்ட காலக் கடனைக் கொடுக்க வேண்டியவை

(3) தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நீண்ட காலக் கடன்

(4) கடன் நிதி நிலையங்களுக்குக் கொடுக்க வேண்டிய குறுகிய காலக் கடன்

(5) தனிப்பட்டவர்கட்குக் கொடுக்க வேண்டிய குறுகிய காலக் கடன்

முதலில் கூறப்பட்ட கடன் விஷயத்தில் சில ஏற்பாடுகள் 1932லேயே செய்யப்பட்டன. அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணத்தில் ஒரு பகுதி தள்ளிக்கொடுக்கப்பட்டது. ஆனால், அந்தச் சமயத்தில் கொடுக்க வேண்டிய எல்லா வரிகளையும், சட்டம் அமுலுக்கு வந்த அந்தத் தேதியிலிருந்த வரிப் பாக்கியில் ஒரு பங்கையும் கொடுத்தாலொழிய, அரசாங்கம் தனக்குச் சேர வேண்டிய பணத்தில் ஒன்றையும் தள்ளிக்கொடுக்காது எனவும் குறிப்பிடப்பட்டது.

விவசாயக் கடன் நிதி நிலையங்கட்குக் கொடுக்க வேண்டிய நீண்ட காலக் கடனை 55 வருஷம் வரையில் கொடுத்து ரத்து செய்

யலாமெனவும், அந்தப் பணத்துக்கு நூற்று க்கு $4\frac{1}{2}$ க்குமேல் வட்டி கிடையாதெனவும் வரையறுக்கப்பட்டது.

தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நீண்ட காலக் கடன் விஷயத்தில், அந்தக் கடன் தொகையை ஒரு குறித்தகாலம் வரையில் கொடுக்க வேண்டியதில்லை என்றும், வட்டியை நூற்றுக்கு 6 வீதம் (6 Percent) கொடுத்தால் போதுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டில் முதல் தொகையைக் கொடுப்பதில் தாமதம் இருக்கலாம். ஆனால், வட்டியை மாத்திரம் சரியாகக் கட்டிவிட வேண்டும்.

குறுகிய காலக் கடன் மாற்றமானது பல வகையால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒத்துக்கொள்ளும் அல்லது ஏற்றுக்கொள்ளும் பாங்கி (Acceptance Bank) என்ற ஒரு பாங்கி நிறுவப்பட்டது. அந்தப் பாங்கியானது கடன் கொடுக்கும் நிலையங்களின் மூலமாகக் கடனாளியான விவசாயியின் கடனை ஒழிக்க முயலுகிறது. அந்தப் பாங்கியானது கீழ்க்காணும் காரியங்களைச் செய்தது:

1. கடன் மாற்ற ஏற்பாட்டின்படி விவசாயிகள் குறைந்த அளவு வட்டியைக் கொடுப்பதால், விவசாய பாங்கிகளுக்கு உண்டான அசௌகரியத்தை நிவர்த்திப்பதற்கான முதலில் வாங்கிய வட்டிக்கும், பிறகு குறைத்துக் கொள்ளப்பட்ட வட்டிக்கும் உள்ள வித்தியா

சத் தொகையை இந்தப் பாங்கி கொடுத்து உதவுவது.

2. கடன் மாற்றத்திற்காகக் குறைக்கப் பட்டதால் ஏற்பட்ட நஷ்டத் தொகையில் நூற்றுக்கு 50 வீதம் கடன் நிலையங்களுக்குக் கொடுப்பது.

தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய குறுகிய காலக்கடனில் குறைவு ஏற்படுத்த வேண்டுமானால், அது தனிப்பட்ட சமாதான ஏற்பாட்டு ஆபீசுகளின் மூலம் செய்யப்பட்டது.

இந்தக் கடன் உதவி ஏற்பாடுகளின் நிமித்தம், நிலங்களானவை அவைகளின் அளவுக்கு ஏற்ப, மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. அந்த ஒவ்வொரு வித நிலத்தின் மேலுள்ள கடனையும் குறைக்கும் முறையிலும், அந்தந்தக் கடன்களின் மேல் எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டுமென்ற நியதியிலும் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் இருந்தது.

தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய குறுகிய காலக்கடன், முதல் இரண்டுவித நிலைமையையுடைய நிலத்தின் மேலிருந்தால், 14 வருஷத் தவணையில் நூற்றுக்கு 3 வீதம் வட்டியுடன் கொடுத்தால் போதும் என ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்றாவது வகை நிலத்திற்கும் பெரும்பாலும் அதே வித ஏற்பாடுதான் செய்யப்பட்டது.

முதல் வகை நிலத்தின்மேல் அந்நில மதிப்புக்கு 100க்கு 75க்கு மேல் கடன் இருந்தாலும் சரி; மூன்றாந்தர நிலத்தின்மேல் நூற்றுக்கு முப்பது முதல் ஐம்பது விகிதம் கடன் இருந்தாலும் சரி; கடன் கொடுத்தவனுக்கும் கடன் வாங்கியவனுக்கும் இடையே கடன் ஏற்பாடு ஒன்று உண்டாக்கப்பட வேண்டுமென்று அந்த நாட்டுச் சட்டங்கள் 1934ல் ஏற்படுத்தப்பட்டன. இப்படிக் கடன் ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கடன் கொடுத்தவனாவது, வாங்கினவனாவது, அல்லது அரசாங்கமாவது (ie. Treasury) சொல்ல உரிமை உண்டு.

1935ல் இன்னும் சில மாறுபாடுகள் செய்யப்பட்டன. கடன் திருப்பிக் கொடுக்க வேண்டியதற்கு மூன்று வருஷ வாய்தா கூடக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்தத் தவணை ஒத்திவைப்பானது பாங்கிகளிடத்தே வாங்கிய கடனைக் கட்டுப்படுத்தாது. மேலும், ஏற்றுக் கொள்ளும் பாங்கி (Acceptance Bank) மூலமாகவும், விவசாயக் கடன் தீர்ப்புக் காரியாலயங்கள் மூலமாகவும், அதிக வட்டிக் கடன்களைக் குறைந்த வட்டிக் கடன்களாக மாற்றிக் கொள்ளலாம்.

## 16. ருமேனியா (Rumania)

இந்த நாட்டின் அரசாங்கமானது விவசாயிகளின் கடன் நிவர்த்திக்காக நான்கு முக்

கியமான சட்டங்களை ஏற்படுத்திற்று. அது மாத்திரமன்றிக் கடன் தொல்லையைக் குறைத்தால் மாத்திரம் போதாது: விவசாயி தன் தொழிலை நடத்துவதில் இலாபம் பெறும்படி செய்ய வேண்டும் என்று அந்த அரசாங்கம் வேலை செய்கிறது.

அந்த வேலைகளில் முக்கியமானவை இவை :

(1) புதிய விவசாய நடு ஸ்தானங்களை உண்டாக்கி, அங்கே புது மாதிரியான விவசாய முறைகட்கான எல்லாவற்றையும் சேர்த்து வைத்து, நிலத்தின் தன்மையையும் வரும்படியையும் உயரும்படி செய்தல்

(2) ருமேனியாவின் விளை பொருள்கள் விற்பதற்கான மார்க்கட்டுகளை அதிகப்படுத்தல்

(3) சில விளை பொருள்களின் விலையை அதிகப்படுத்துவதன் மூலம், கடனாளி தான் கொடுக்கவேண்டிய தொகைகளை உரிய காலத்தில் கொடுக்கும்படியும் செய்தல்

(4) கடன் பட்டவர்கள் தங்கள் கடனை ஒழிப்பதற்குக் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும்படி செய்தல். அதற்காக விவசாய அடைமானக் கடன் பாங்கிகட்கு அரசாங்கம் கொடுத்திருந்த கடனுக்கு 2 சத விகிதம் வட்டி குறைக்கப்பட்டது. அந்தக் கடன் பாங்கிகள்

தாங்கள் கடன் கொடுப்பதில் அதே மாதிரி நூற்றுக்கு இரண்டு விகிதம் வட்டியைக் குறைத்துக்கொண்டன.

(5) வேறு அரச வரிகள் இல்லாது செய்வது; அல்லது குறைப்பது

விவசாய, அல்லது நகரத்திற்குரிய கடன் தொகை ஒழிப்பானது எப்படிச் செய்யப்பட்டதென்பது கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

(1) விவசாயிகள் தாங்களாகவே, தங்கட்கு எது சௌகரியம் எனத்தோன்றுகிறதோ அதேமாதிரி, ஒரு முறையாகக் கடனைத் திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்வது

(2) சட்டத்தை மிக விரைவாக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து, கால தாமதத்தாலுண்டாகும் அசௌகரியம் இல்லாது தடுப்பது

(3) கடன் கொடுக்க வேண்டியதற்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளில் ஒரு விதச் சூதும் மோசடியும் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளுதல்

(4) கடன் கொடுத்தவர்களிடையே ஏற்றத் தாழ்வு இல்லாமல் ஒரே மாதிரியான நஷ்டமே ஏற்படும்படி செய்து, கொடுக்கல் வாங்கல் முறையில் பண முட்டுப்பாடு உண்டாகாமல் காப்பாற்றல்

கடன் கொடுத்தோருக்குச் சேர வேண்டிய தொகையைப் பற்றி ஏற்பாடு செய்ய அவர்களு

டைய சம்மதம் வேண்டுமெனச் சட்டம் ஒப்புக்கொள்ளுகிறது. கடன் கொடுத்தவன் சும்மா இருந்தால், அப்போது அவன் சட்டத்தை ஒப்புக்கொள்வதாகவே கொள்ளப்படுகிறது. அதை அவன் ஒப்புக்கொண்டதாக வைத்துக்கொண்டு, மேல் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கடன் கொடுத்தவருக்குச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதில் சம்மதமில்லாவிட்டால், எழுத்து மூலமாக அதைத் தெரிவிக்க வேண்டும். அப்போது கடன் முதல் தொகையில் ஒன்றும் தள்ளுபடி செய்யப்படாது. ஆனால், கடன் தொகை கொடுக்க வேண்டிய வாய்தா, 10 வருஷத்துக்கு ஒத்தி வைக்கப்படும். பிறகு அந்தக் கெடுவு 5 வருஷத்திற்கு மேலும் ஒத்தி வைக்கவும்படலாம். ஆனால், அந்தக் கடன் தொகைக்கு நூற்றுக்கு வருஷம் ஒன்றுக்கு 1 வட்டி வீதந்தான் வட்டி கொடுக்கப்படும். மேலும் பொது நன்மைக்கென அரசாங்கத்தார் அந்தத் தொகை உரிமையைப் பறிமுதல் செய்துவிடலாம்.

அதே சட்டப்படி கடன் கொடுத்தவருக்குச் சேர வேண்டிய தொகையில் நூற்றுக்கு 50 வீதம் (அதாவது சரிபாதி) தள்ளிவிடலாம். பாக்கிப் பணத்திற்கு வட்டி நூற்றுக்கு மூன்று தான். அந்தத் தொகையை வருஷம் இரு முறையாக 17 வருஷங்களில் கொடுக்கலாம். கடன் வாங்கியவனுக்குச் சௌகரியமாக இருக்கும்படி

முதல் இரண்டு தடவை கொடுக்க வேண்டிய பணம், குறைக்கப்பட்ட கடன் தொகையில் நூற்றுக்கு $2\frac{1}{2}$ வீதம் ஆகும். பிறகு இரண்டு தடவை கட்டணம், குறைபட்ட கடன்தொகையில் நூற்றுக்கு 3 பங்கு ஆகும். ஏனைய 30 தடவைக் கட்டணமும், பாக்கி கொடுக்க வேண்டிய தொகையில் முப்பதில் ஒரு பங்காகும்.

கடன் வாங்கியவர்கள் சீக்கிரம் கடனைத் திரும்பிக் கொடுக்கும்படி செய்யச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எவனாவதொரு கடன்காரன் முதல் வருஷத்தில் வட்டியும் முதலுமான தொகையில் நூற்றுக்குப் பதினைந்து வீதம் கொடுத்து, இரண்டு வருஷத்தில் முழுக் கடனையும் கொடுப்பதாக இருந்தால், மொத்தம் கொடுக்க வேண்டிய கடனில் 100க்கு 70 வீதம் தள்ளுபடி செய்யப்படும். அல்லது வட்டி முதல் தொகையில் நூற்றுக்கு 8 வீதம் கடன் கொடுத்துவிட்டு, பாக்கியை 5 வருஷத்தில் கொடுத்துவிடுவதானல், கொடுக்க வேண்டிய கடனில் நூற்றுக்கு 70 வீதம் தள்ளுபடி செய்யப்படும்.

ஏதாவது ஒரு தவணைத் தொகையைக் கட்ட வேண்டிய காலத்துக்கு முன்பே கட்டிவிட்டால், அந்தப் பணம் கட்டப்பட்ட தேதிக்கும், கட்டப்பட வேண்டிய தேதிக்கும் இடையே உள்ள காலத்துக்கு நூற்றுக்கு 6 வீதம் வட்டி கொடுக்கப்படும்.

அநேக விவசாயிகள் இந்தக் கடன் தள்ளு முறையாலான இலாபங்களை, விவசாய அடைமானக் கடன் பாங்கிகள் மூலம் பணம் வாங்கிக் கட்டி, தாங்களே அடைகிறார்கள்.

விவசாயக் கடனைக் குறைக்கும் சட்டம், கடன் திருப்பிக் கொடுக்கும் காலத்தைத் தள்ளி வைக்கும் சட்டம் இவைகளால் பல விவ்சாயிகள் விசேஷ நன்மை பெற்றிருக்கிறார்கள்.

## 17. சூகோஸ்லோவகியா (Czecho—Slovakia)

விவசாயிகளின் கஷ்டத்திற்கு முக்கிய காரணம் விளை பொருள்களின் விலை வீழ்ச்சியாகும். மேலும், விவசாயிகள் கடு வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். கட்டடம் முதலியவைகளில் ஏராளமான பணத்தைப் போட்டார்கள். விவசாயம் க்ஷேமமாய் இருந்த போது, நில அபிவிருத்திக்காகவும், யந்திரம் முதலியவைகளை வாங்குவதற்கும் அதிக பணம் செலவு செய்துவிட்டார்கள். தங்களுடைய வாழ்க்கையின் செலவும் அதிகமாகும்படி செய்துவிட்டார்கள். சிலர் வாங்கிய நிலத்தின் பேரில் கடன் வைத்துக்கொண்டார்கள். சிலர் மாடு கன்றுகளை வாங்குவதற்கும் கடன் வாங்கினார்கள். விவசாயிகளிலே நகரங்களுக்குச் சமீபத்திலிருப்பவர்களின் கடன் தொகைதான்

அதிகமாய் இருந்தது; உள் நாட்டில் வசிப்பவர்களுக்கு அவ்வளவு கடன் இல்லை.

இந்த நாட்டில் விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிக்க அநேக ஏற்பாடுகள்செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் கொஞ்சகாலத்திற்கென ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள்பெரும்பாலும் சாசுவதமாகிவிட்டன.

'சட்டங்களின் தொகுப்பு' ஒன்றை அந்த அரசினர் வெளியிட்டனர். அதில் நில ஜப்தி முதலிய எல்லா விஷயங்களையும்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. விவசாயி ஒன்றுமற்றவன் (Bankrupt) ஆனால், அப்போது செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றியும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது

இந்தச் சட்டங்களெல்லாம் 1935-ஆம் வருஷம் வரையில் அமுலிலிருந்தன.

1934-ஆம் வருஷச் சட்டப்படி சில விளை பொருள்களின் விலை வரையறுக்கப்பட்டது. அந்த விளை பொருள்களின் விலை அதிகமாக மாறுதென்ற உறுதி இருந்தபடியால், விவசாயிகளுக்கு மனக் கிளர்ச்சி மிகவும் மேலோங்கி இருந்தது.

கால நிலை சற்று மாறியதும், கடன் ஒத்தி வைப்புக்காக இருந்த சில நிபந்தனைகள் மாற்றப்பட்டன. கடன் சமரசத்தை எப்படிக் கொண்டு வரலாமென்பதற்கான சட்டங்கள் ஆக்கப்பட்டன.

1935-ஆம் வருஷம் டிசம்பர் மாதச் சட்டப்படி இவ்வளவு வட்டிக்குமேல் அதிகமாக வட்டி வாங்கக் கூடாதென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. மேலும், மிக்க கஷ்ட நிலையிலிருந்த விவசாயிகளுக்குக் கவர்ன்மெண்டாராலேயே கடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

கட்டாய நில விற்பனையால் விவசாயிகள் கஷ்டம் அடையாதபடி, கட்டாயமாக நிலத்தை ஏலத்திற்குக் கொண்டுவரக் கூடாதென ஏற்பாடு செய்யப்பட்டது. எல்லாக் கடனையும் சமரசமாகவே கொடுக்க வேண்டியதற்கான சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டன. இதற்காக வேறு சில சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன.

## 18. யூகோஸ்லேவியா (Yugoslavia)

இந்த நாட்டு விவசாயிகளின் கடன் கஷ்டத்தை நிவர்த்திக்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டன.

முதலில் விவசாயிகளுக்கு வேண்டிய கடன் எளிதில் கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்தது. பின்பு வெளி நாட்டு ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்த ஒரு தனி டிபார்ட்மெண்டு ஏற்படுத்தப்பட்டது.

மிகவும் அதிகமாகக் கடன் வாங்கி, அதனால் நிலத்தை இழக்கும் நிலைமையிலிருந்த

விவசாயிகளை, மேலே சொல்லப்பட்ட சட்டங்கள் காப்பாற்ற முடியவில்லை.

ஆறு மாதத்திற்குக் கடன் தவணை எல்லாம் ஒத்தி வைக்கப்பட்டன. அந்த ஆறுமாத காலம் போதவில்லையாதலால், அந்தக் காலம் இன்னும் நீட்டிக்கப்பட்டது.

1934-ஆம் வருஷச் சட்டப்படி எந்தக் கடனையும் வருஷத்திற்குக் கொஞ்சம் கொஞ்சம் அதிகமாக, 12 வருஷத்திற்குள் கொடுத்தாற் போதுமென்றும், முதல் தவணையிலிருந்து நூற்றுக்கு 6 வீதம் வட்டி கொடுத்தால் போதுமென்றும் சட்டங்கள் விதிக்கப்பட்டன.

1936-ஆம் வருஷம் கடன் குறைவுச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சட்டப்படி விவசாயிகளின் கடன் மாத்திரந்தான் கவனிக்கப்பட்டது. விவசாயிகள் ஆட்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலிப் பாக்கி, சாப்பாட்டுக்காக வாங்கின கடன், ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன் (இது இவ்வகைப்பட்டதெனக் கோர்ட்டுகள் நிச்சயிக்க வேண்டும்) இவை போன்ற கடன்களுக்கு இந்தச் சட்டம் ஏற்படுத்தப்படவில்லை.

சாமான்களை வாங்கியதால் உண்டான கடனையும், கொல்லர், தச்சர் முதலியவர்களைப் போன்ற தொழிலாளிகளின் சம்பளப் பாக்கியையும் விவசாயிகள் அவசியம் கொடுத்துத் தீர்த்துவிட வேண்டும். ஆனால், அந்த விதமான

பாக்கிகளுக்கு வட்டி கொடுக்க வேண்டிய தில்லை. அந்தப் பாக்கிக் கடன்களைக் கொஞ்சம் கொஞ்சமாக 12 வருஷத்திற்குள் கொடுத்துத் தீர்த்துவிட்டால் போதும்.

வேறு விதமாக வாங்கிய கடனில் பாதித் தொகையைக் கொடுத்தால் போதும். பாதித் தொகை ரத்து செய்யப்பட்டுவிடும். அந்த எஞ்சிய தொகைக்கு நூற்றுக்கு 3 வீதம் வட்டி கொடுத்தால் போதும். கடன் கொடுத்தவ ராவது, அல்லது வாங்கியவர்களாவது, நூற் றுக்கு ஐம்பது விகிதம் குறைத்தது போதா தென்று கோர்ட்டுக்கு மனுச்செய்துகொண்டு, இன்னும் அதிகமாகக் குறைத்துக்கொள்ள லாம். அப்படி எப்போதும் செய்வதில்லை. ஒரு குறித்த கடன் பாக்கி இருக்கும்போது, கடன் கொடுத்தவன் அநியாய வட்டி வாங்கி வந்திருந்தால்தான், அப்படிச் சரி பாதிக்கு மேல் குறைக்க முடியும்.

சாதாரணப்பாங்கி, கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவைகள் கொடுத்த கடனையெல்லாம், அந்தத் தேசத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பல உரிமை விவசாயப் பாங்கி (Privilaged Agricultural Bank) எடுத்துக்கொண்டது. சிறிய விவசாயிகளின் கடனையெல்லாம் 100க்கு 50 வீதம் குறைத்துவிட்டது. பெரிய விவசாயி கள் கடன் மாத்திரம் 100க்கு 30 வீதத்திற்கு மேற்படாத அளவு குறைத்துவிட்டது. பாக்கி

100க்கு 10 பங்கை $4\frac{1}{2}$ வட்டி வீதம் 12 வருஷத்தில் வருஷத்திற்குக் கொஞ்சமாக அந்த விவசாயி கொடுத்துத் தீர்த்துவிட வேண்டும்.

சாதாரணப் பாங்கிகளும், கூட்டுறவுப் பாங்கிகளும் மேலே கூறப்பட்ட பல உரிமை விவசாயப்பாங்கிக்கு, தங்களுக்கு வரவேண்டிய பணத்தை மாற்றும்போது என்ன முறையை அநுஷ்டிக்கின்றன என்பதை ஆராய்வோம்: 100 ரூபாய் சாதாரணப் பாங்கிக்கோ அல்லது கூட்டுறவுப் பாங்கிக்கோ வர வேண்டி இருந்தால், அதில் 100க்கு 25 ரூபாயைத் தள்ளி விட்டு, செலவுக் கணக்கில் எழுதிக்கொள்ளும். இன்னும் 25 ரூபாய்க்கு அரசாங்கக் கடன் பத்திரத்தை அரசாங்கத்தார் கொடுப்பார்களாதலால், வாங்கிக்கொள்ளும் மீதி 50 ரூபாயைப் பல உரிமை விவசாயப் பாங்கிக்குக் கடன் கொடுத்ததாகக் கணக்கு வைத்துக்கொள்ளும். சர்க்கார் கடன் பத்திர ரூபமாக வாங்கிக்கொண்ட தொகைக்கு, அந்தப் பாங்கிகளுக்கு 3 வட்டி வீதம் வட்டி கொடுக்கப்பட்டு வரும். மீதி 50 ரூபாயை 3 வீத வட்டியுடனே 14 வருஷத்திற்குள் கொடுக்கப்படுமென்று அரசாங்கம் உறுதி கூறும்.

## 19. எஸ்டோனியா (Estonia)

இந்தத் தேசத்தில் மொத்த நிலத்தில் 100க்கு 50 பங்கு நிலங்கள் கடனால் கட்டுப்

பட்டுக் கிடந்தன. கடன்காரனது முதலின் மதிப்பில் நூற்றுக்கு $25\frac{1}{2}$ வீதம் கடன் இருந்தது.

நில பாங்கி (Land Bank) கொடுத்திருந்த கடனுக்கெல்லாம் 100க்கு $2\frac{1}{2}$ வீதம் வட்டி கொடுத்தால் போதுமெனச் சட்டம் வகுக்கப் பட்டது.

அதல்லாமல், தனிப்பட்டவர்களிடமும், பிரத்தியேகமான ஸ்தாபனங்களிடமும் வாங்கிய குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டது. விவசாயி செவ்வையாகப் பயிரிட்டால்தான் அந்த நன்மையைக் கவர்ன்மெண்டார் செய்வர். ஒரு விவசாயி, தன் நிலத்தின் மதிப்பிற்கு 100க்கு 20 பங்கு குறைவான கடன் வாங்கி இருந்தால், அவனுக்கு இவ்வித உதவி செய்யப்படமாட்டாது. அல்லது அவன் நில மதிப்பைவிட அதிகமான கடன் இருந்தாலும், அப்போதுகூட மேற்கண்ட உதவியை அரசாங்கம் செய்வதில்லை. அப்படி ஏற்பாடு செய்யப்பட்ட, தனிப்பட்டவர்கள் கொடுத்த கடனை, விவசாயியின் நன்மைக்காக, நில பாங்கி (Land Bank) பத்து வருஷத்தில் தானே கொடுத்து அடைத்து விடும்; அந்தப் பணத்தை, அந்த விவசாயியிடமிருந்து 30 வருஷத்தில் பெற்றுக்கொள்ளும்.

1934ல் வேறொரு சட்டம் ஏற்படுத்தப் பட்டது. அதன்படி, பெரிய தொகைக் கடன்

களுக்கும், நில பாங்கி உதவி செய்ய வேண்டு மென ஏற்பாடு செய்யப்பட்டது. விவசாயி யின் கடன் நில விலை மதிப்பில் 100க்கு மேல் போய்விட்டால், அப்போது அந்த விவ சாயி, அந்தக்கடனை, வட்டியில்லாமல் 30 வரு ஷத்தில் கொடுத்தால் போதுமெனச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது.

## 20. லேட்வியா (Latvia)

விவசாயிகள், விலை வாசி ஏறி நின்ற போது, தாராளமாகக் கடன் வாங்கிவிட்டபடி யால், கடன் தொல்லை அதிகமாயிற்று. விவ சாயியின் சொத்துகளைச் சிறிது காலம் வரை யில் கடனுக்காக ஏல விற்பனைக்குக் கொண்டு வரக் கூடாதென்று சட்டமொன்று செய்யப் பட்டது. கவர்ன்மெண்டார் கொடுத்திருந்த சிறு தொகைக் கடன்களை முற்றிலும் அரசாங்கம் ரத்து செய்துவிட்டது. விவசாயிகள் தனிப் பட்ட பாங்கிகளிலோ, கூட்டுறவுப் பாங்கி களிலோ, கொஞ்சகாலத்தில் கொடுத்துவிடுவ தென்று வாங்கி இருந்த கடன்களை, அரசாங்க நில பாங்கிகளுக்கு மாற்றிக்கொள்ள உத்தரவு தரப்பட்டது. அப்படி மாற்றிக்கொண்டால், அந்தக் கடனைக் கொஞ்சம் கொஞ்சமாக நீண்ட காலத்தில் கொடுத்தால் போதும்.

அரசாங்கத்தார் விவசாயிகளுக்குக் கொடுத்திருந்த கடன்களுக்கும், மற்றவர்கள்

விவசாயிகளுக்குக் கொடுத்திருந்த கடன்களுக்கும் பல வேறு வகையாக வட்டி குறைக்கப்பட்டது.

அந்தத் தேசத்தில் இப்போது பெரும்பாலான கடன்கள் நீண்ட நாட்கடன்கள் தான்.

1932-ஆம் வருஷ முதல் 1934-ஆம் வருஷம் வரையில் கிராம விவசாயக் கட்டடங்கள், நில அபிவிருத்தி, நிலம் வாங்கல் முதலிய காரியங்களுக்காக, விவசாயிகள் கடன் வாங்கி இருந்தால், அந்தத் தொகையில் பெரும்பகுதியை அரசாங்கத்தார் ரத்து செய்துவிட்டார்கள்.

இவ்வாறு பல வகையாலும் அந்நாட்டு விவசாயிகளுக்கு நன்மை செய்யப்பட்டது.

## 21. லிதுயேனியா (Lithuania)

1932-ஆம் வருஷம் வரையில் இந்த நாட்டு விவசாயிகள் கஷ்டமடையவில்லை. 1932-ஆம் வருஷம் அடைமானத்தின்மேல் வாங்கப்பட்ட கடன் வட்டி $6\frac{1}{2}$ அல்லது 7 சத விகிதமாகும். அந்த வட்டியானது 1934-ஆம் வருஷம் 5 சத விகிதமாகவும், 1937ல் 3 விகிதமாகவும் குறைக்கப்பட்டது.

குறைந்த காலக் கடன்களையெல்லாம் நீண்ட காலக் கடனாக அரசாங்கம் மாற்றி விட்டது. விவசாயி, தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கி இருந்தால், அந்தக் கடன்

தொகையை விவசாயப் பாங்கியின் கடன் பத்திரங்களைக் கொண்டு கொடுத்து அடைத்து விடலாம். விவசாயி மேற்கூறிய கடன் பத்திரங்களைப் பாங்கியிலிருந்தாவது, வெளியிலே இருந்தாவது வாங்கிக்கொள்ளலாம். அந்தப் பத்திரங்களை நில பாங்கியாரிடமிருந்து வாங்கினால், 3·6 சத விகித வட்டி கொடுத்தால் போதும்.

வேறொரு சட்டப்படி, 4 மாதம் முதல் 18 மாதம் வரையில் கடனுக்காக நில விற்பனை கொண்டு வரப்பட்டால், அதை அரசினர் தடுக்கலாம். ஒருவனுடைய நிலத்தின் மதிப்புக்கு $\frac{3}{4}$ பங்குக்கு மேற்பட்ட அளவு கடன் இல்லாத நிலத்திற்குத்தான் அவ்விதச் சௌகரியம் செய்து கொடுக்கப்படும்.

## 5. இந்தியாவில் இதுவரையிலும் செய்யப்பட்ட வேலை

மிகப் பழைய காலத்திலே கடன் தொல்லையை ஒழிப்பதற்கு ஒரு பழக்கம் இருந்தது. 50 வருஷத்துக்கு ஒருதரம் யூதர்கள் ஜுபிளி விழாக் கொண்டாடுவார்கள். அப்போது பழைய பாக்கிகளெல்லாம் கொடுத்துத் தீர்ந்ததாக எண்ணப்படும்.

சேர தேசத்திலே பன்னிரண்டு ஆண்டு முடிவை மாமாங்கம் என்று சொல்லி வந்தார்கள். அக்காலத்திலே மாமாங்கத்தின்போது பழைய கொடுக்கல் வாங்கல்களை முடிக்கவேண்டுமென்னும் பழக்கம் இருந்து வந்தது.

1865-ஆம் வருஷமுதல் 70-ஆம் வருஷம் வரையில் இந்திய பொருள்களின் விலை மிகக் குறைவாய் இருந்தது. அப்போது அரசாங்கம் விவசாயிகளின் கடனைக் குறைக்கக் கோர்ட்டுகளுக்கு அதிகாரத்தைத் தந்தது. மேலும், விவசாயிகள் எளிதில் கடன் பெற்று நன்மை அடையவும் சில சட்டங்கள் செய்யப்பட்டன.

விவசாயிகளுக்கு, விவசாயத் தொழில் செய்வதற்காகக் கடன் கொடுக்க, கவர்ன்மெண்டார் முன் வந்தனர். 1872-73ல் தக்காவிக் கடன் சட்டம் முதல் முதல் நிறைவேற்றப் பட்டது. 1871, 1876, 1879 முதலிய வருஷங்

களில் அச்சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

1875ல் டெக்கான் கலக விசாரணைக் கமிட்டியாரின் சிபாரிசின்படி 1879ல் டெக்கான் விவசாயிகளின் சகாயச் சட்டம் (**The Deccan Agriculturalists' Relief Act**) இயற்றப்பட்டது. இந்தச் சட்டப்படி கோர்ட்டார் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் வழக்கையும் பற்றி, எப்படி அது உண்டாயிற்று என்ற பல விஷயங்களையும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென விதிக்கப்பட்டது. இந்தச் சட்டப்படி கடன் கொடுப்பவர், அப்போதைக்கப்போது இரசீதுகளைத் தர வேண்டுமென்றும், கணக்குச் சரியாக வைத்திருக்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தச் சட்டத்தால் விசேஷப் பயன் உண்டாகவில்லை.

1918-ஆம் வருஷத்தில் கடு வட்டிச் சட்டம் இயற்றப்பட்டது. அது 1926ல் திருத்தி அமைக்கப்பட்டது. அந்தச் சட்டப்படி, கடனுக்கு இவ்வளவு வட்டிக்குமேல் வாங்கக்கூடாது என்று வரையறுக்கப்பட்டது. அதல்லாமல், எந்தக் கடன் வழக்கையும் பற்றிக் கோர்ட்டார் தீர ஆலோசனையும் விசாரணையும் செய்ய வேண்டுமென்று விதித்தது.

1930-ஆம் வருஷத்தில் பஞ்சாப்புக் கணக்குச் சீர்படுத்தும் சட்டம் (**The Punjab Regulation of Accounts Act**) ஏற்படுத்தப்பட்டது.

அந்த மாகாணத்திலுள்ள லேவாதேவிக்காரரெல்லாம், முறையாகக் கணக்கு வைத்திருக்க வேண்டுமென்றும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை தங்களிடம் கடன் வாங்கி இருப்பவர்கட்கெல்லாம் தங்களிடமுள்ள பற்றுவரவு விவரங்களை எழுதி அனுப்ப வேண்டுமென்றும் அரசாங்கத்தார் உத்தரவளித்தனர். அப்படிக் கணக்கு வைக்கத் தவறினாலும், கணக்கு அனுப்பத் தவறினாலும் கோர்ட்டார் வட்டிப் பாக்கியில் முழுவதையுமாவது, அல்லது ஒரு பகுதியையாவது தள்ளிவிடலாம். கோர்ட்டுச் செலவும் அநுமதிக்கப்படாது.

அரசாங்க விவசாயக் கமிஷன் பஞ்சாப்புச் சட்டத்தைப் போல எல்லா மாகாணங்களிலும் சட்டங்களை ஏற்படுத்தல் நல்லது என்று குறிப்பிட்டது. ஆனால், பல மாகாணங்களிலும் பாங்கி விசாரணை செய்த பாங்கி விசாரணைக் கமிட்டியார் இதைப் பற்றி ஒரே விதமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை. இம்மாதிரியான சட்டம் எல்லா மாகாணத்திலும் பயனுள்ளதாக இருக்குமா என்பதில் அபிப்பிராய பேதம் இருக்கிறது.

விவசாயியின் நிலம், விவசாயி அல்லாத மற்றவர்களிடம் போகாதவாறு தடுக்கப் பஞ்சாப்பிலே 1901-ஆம் வருஷத்திலே ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது. எந்த விவசாயி இடமிருந்தும், விவசாயி அல்லாத எவரும் நிலத்தை வாங்

கக்கூடாது. நிலத்தை அடைமானமாக வாங்கினாலும், 20 வருஷத்துக்கு மேல் அடைமானமாக வாங்கிக்கொள்ளக் கூடாது.

இந்தச் சட்டமும் அதிக பயன் தரவில்லை. விவசாயி நிலத்தை வாங்கிக்கொள்ள இந்தச் சட்டம் இடந்தந்தது. அதனால், விவசாயிகளிடையே லேவாதேவிக்காரர் பலர் தோன்றினர். மேலும், அந்தச் சட்டப்படி, பட்டினங்களிலே படித்துப் பணம் சேர்த்தவர்கள், கிராமத்தில் குடியேறி, விவசாயத்தைக் கவனிக்க விரும்பினால், அதை இச்சட்டம் தடுப்பதாயிற்று.

ஐக்கிய மாகாணங்களிலே சில சந்தர்ப்பங்களில் விவசாயியின் கடனை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு கொடுத்துத் தீர்த்துவிடலாமென விதி அமைக்கப்பட்டது.

எல்லா மாகாணங்களிலும் கடு வட்டிச் சட்டமானது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதனாலும், கடு வட்டி ஒழிக்கப்பட்டு வருகிறது.

### கடன் சமரசச் சட்டம் :

மத்தியமாகாணம், பேராரிலேதான் கடன் சமரசச் சட்டமானது முதல்முதல் ஏற்படுத்தப்பட்டது. 1933-ஆம் வருஷ முதல் கடன் சமரசப் போர்டுகள் நியமிக்கப்பட்டு, கடன் பளுவை மிகவும் குறைத்து வந்திருக்கின்றன. இச்சட்ட

மானது அமுலுக்கு வந்த பிறகு அநேக கடன் கொடுத்தவர்களும் வாங்கியவர்களும் தங்களுக்குள்ளேயே சமரசமாக ஏற்பாடுகள் செய்து கொண்டு, கடனைத் தீர்த்துக்கொள்ளலானார்கள். கடன் கொடுத்தவர்கள் சமரசத்திற்கு உடன்படாவிட்டால், கடன் சமரசப் போர்டுகள் சாக்ஷிப் பத்திரங்களை வெளியிடும். அப்படிப்பட்ட கடன்களின்பேரில் அதுமுதல் நூற்றுக்கு 6க்கு மேல் வட்டி கிடையாது. கோர்ட்டுக்குச் சென்றால், கோர்ட்டுச் செலவும் அநுமதிக்கப்படமாட்டாது.

1934ல் பஞ்சாப்பு விவசாயக் கடன் உதவிச் சட்டம் (**The Punjab Relief of Indebtedness Act**) ஏற்படுத்தப்பட்டது. பதினாயிரத்துக்குக் குறைந்த கடன் தொகையாக இருந்தால், சமரசத்தை ஏற்படுத்தக் கவர்ன்மெண்டார் போர்டுகளை நியமிக்கலாம். இந்த மாகாணத்தில் தண்டுபட்டு என்ற ஒரு பழைய முறை அநுஷ்டிக்கப்படுகிறது.

1935-ஆம் வருஷத்தில் வங்காளத்திலும் விவசாயிகளின் கடன் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சட்டப்படி கடன் ஏற்பாடு (**Settlement**) போர்டுகள் நியமிக்கப்பட்டன. கடன் கொடுத்தவனாவது, கடன் வாங்கியவனாவது, கடன் ஏற்பாடு செய்யும்படி போர்டாரிடம் விண்ணப்பித்துக்கொள்ளலாம். சட்டப்படி கடன் கொடுத்தவர் எல்லோருக்கும் நோட்டீஸ்

அனுப்பப்படும். ஒரு கடனளிக்குக் கடன் கொடுத்த யாராவது, போர்டாரிடம் அவர்கள் கேட்கும்போது, கடன் விவரங்களேக் கொடுக்கத் தவறினல், போர்டார் அக்கடனேப் பிறகு வாங்க அனுமதிக்கமாட்டார். கடனளியின் ஏதாவதொரு மொத்தக் கடனில் நூற்றுக்கு 40 அளவு கடன் கொடுத்தவர்கள் ஒருவித ஏற்பாட்டிற்கு உடன்பட்டால், அதை மற்றவர்களும் ஒத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தப் போர்டாருக்கு அதிகாரம் உண்டு.

சென்னே மாகாணத்திலே மூன்று வருஷங்கட்கு முன்னே கடன் வாங்கியவர்களேக் காப்பாற்றுச் சட்டம் (The Debtors' Protection Act) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதனல் விசேஷ நன்மை ஒன்றும் விளேயவில்லே. சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு கடன் சமரசச் சட்டம் இயற்றப்பட்டது. அந்தச் சட்டப்படி அரசாங்கத்தார் ஒரு ஜில்லாவுக்காவது, அல்லது ஒரு ஜில்லாவின் பகுதிக்காவது கடன் சமரசப் போர்டை ஏற்படுத்தலாம். எந்தக் கடனளி போர்டுக்கு மனுச் செய்துகொள்ளுகிருனே, அவனுக்குக் கடன்கொடுத்தவர் எல்லாரிடமிருந்தும் கணக்குக் கேட்கப்படும். அப்போது தவருமல் எல்லாக் கடன் கொடுத்தோரும் கணக்கை அனுப்பிவிட வேண்டும்.

ஒருவன் கொடுக்க வேண்டிய கடனில் பாதிப் பணம் யார் யாருக்கெல்லாம் செல்லுபடி

ஆக வேண்டி இருக்கிறதோ, அவர்கள் ஒரு விதக் கடன் சமரசத் திட்டத்தை ஒத்துக் கொண்டால், அது பதிவு செய்யப்படும்.

போர்டார் விசாரணை செய்யும்போது எந்தக் கடன் கொடுத்தவனுவது சமரச உடன்பாட்டிற்கு ஒத்துக்கொள்ளாவிட்டால், போர்டார் ஒரு சாட்சிப் பத்திரத்தை எழுதி வெளியிடுவார். அதில் அந்தக் கடன் கொடுத்தவனுக்கு எவ்வளவு கடன் கொடுத்தால் போதுமென்பது குறிக்கப்படும். அப்படிச் சாட்சிப் பத்திரம் கொடுபட்டுவிட்டால், அந்தத் தொகைக்குக் கோர்ட்டில் பிரியாது செய்ய வேண்டுவதில்லை.

இந்தச் சட்டத்தாலும் சென்னை மாகாண விவசாயிகட்கு நன்மை அதிகமாக உண்டாகவில்லை. விவசாயிகளும் இந்தச் சட்டத்தை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

எனவே, அநேக அந்நிய நாடுகளில் செய்துள்ளதே போல, விவசாயிகளுக்குக் கடன் பளு மிகவும் குறையவும், கடன் தொல்லை அடியோடு ஒழியவும், சென்னை மாகாணத்திலே சட்டம் ஏற்படுத்த அரசாங்கத்தார் முன் வந்திருக்கின்றனர். இந்த முயற்சி பொது மக்களால் மிகவும் பாராட்டத் தக்கது. இதை அனைவரும் ஆதரிக்க வேண்டும். இவ்விதத் தீரச் செய்கையை வேறு எந்த மாகாண அரசாங்கத்தாரும் செய்யவில்லை. இப்போது

மாகாண அரசாங்கத்தார் கொண்டு வந்த மசோதாவானது சட்டமாக நிறைவேற்றப்பட்டதால், அது விவசாய மக்களுக்குப் பெரிதும் நன்மையைத் தரும் என்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. ஆகையால், சென்னை மாகாணமக்கள் அனைவரும் இச்சட்டத்தை ஆதரிக்கவேண்டும்; அதுவுமல்லாமல் இச்சட்டத்தைக்கொண்டு வந்துள்ள மந்திரி சபையாருக்கும் நன்றி அறிதல் உடையவர்களாக இருக்கவேண்டும்.

# 6. முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் பல பல தேசங்களில் விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிக்கப் பல வேறு முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை விளக்கமாக அறியலாம். சுருங்கக் கூறுமிடத்து அம்முறைகள் மூவகைப்பட்டன என்று குறிக்கலாம்: (1) கடன் பாக்கி வட்டிப் பாக்கி முதலியவைகளைக் குறைக்க கைக்கொண்ட முறைகள்; (2) விளை பொருள்களின் விலையை அதிகப்படுத்த முயற்சிகள்; (3) விவசாயத்தைச் செம்மைப் படுத்தக் கொண்டுள்ள வழிகள் என்பவை அவை.

(1) அவைகளுள் கடன் பாக்கி, வட்டிப் பாக்கியைக் குறித்த முறைகளே மிகப் பல. அவையே மிக முக்கியமானவை.

சில நாடுகளில் கடன் தொகையில், முதல் தொகையிலே ஒரு பகுதி குறைக்கப்பட்டிருக்கிறது. வட்டிப் பாக்கி முழுவதும் ஒழிக்கப் பட்டிருக்கிறது. முதல் தொகையிலும், சில நாடுகளில் பெரும்பகுதியும், சில நாடுகளில் சிறு பகுதியும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

அநேக நாடுகளில் வட்டித் தொகை, கட்டாயத்தின்மேல் குறைக்கப்பட்டிருக்கிறது.

விலை வாசி குறைந்துள்ள இந்தக் காலத்திலே, விவசாயிகள் அதிக வட்டி கொடுக்க முடியாதென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டே அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. வட்டிப் பாக்கிக் குறைவிலும் பல முறைகள் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

கடன் தொகையைக் குறைக்கும் விஷயத்தில், சில நாடுகளில், கடன் கொடுத்தவர் வாங்கியவர்களிடையே சமரசமாக ஏற்பாடு செய்துகொள்ளுவதற்கு வசதி தரப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கோர்ட்டுக்கு மனுச் செய்துகொள்வதன் மூலம், கடன் தொகை குறைவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அநேகமாக எல்லா நாடுகளிலும்,விவசாயியின் நிலமானது, ஏலத்துக்கு வந்து, மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க ஏற்பாடு நடந்திருக்கிறது.

கடன் தொகையைத் திருப்பிக் கொடுப்பது எப்போது? எப்படி? என்ற விஷயங்களில் பல முறைகள் அநுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அநேக இடங்களில் குறுகிய காலக் கடன் நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது. சில நாடுகளில் அமார்டைசேஷன் (Amortisation) என்ற முறை கையாளப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு குறித்த சிறு தொகையை, மூன்று மாதத்திற்கு ஒரு தரமோ அல்லது ஆறு மாதத்திற்கொரு தரமோ, பல

வருஷங்கள் வரையில் கொடுத்து வந்தால், கடன் தொகையின் முதலுக்கும் வட்டிக்குமாக அந்தத் தொகை ஈடு செய்துகொள்ளப்படும். பிறகு கடன் பாக்கி இல்லாது போகும். சில இடங்களில் சில காலம் கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை எனச் சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. சில நாடுகளில் விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடனை அரசாங்கமோ, அரசாங்க ஆதரவு பெற்ற பாங்கிகளோ ஏற்றுக்கொண்டு, கடன் கொடுத்தவர்களுக்கு அப்பணத்தைக் கொடுத்துத் தீர்த்துவிட்டு, கடன் தொகையை விவசாயியிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறது.

சில தேசங்களில் சட்டப்படி ஒரு விகித வட்டிக்கு மேல் வாங்கக் கூடாதென ஏற்படுத்தப்பட்டது. அநேக இடங்களில் வட்டிப் பாக்கி ரத்தினாலேயோ, வட்டிப் பாக்கிக் குறைவாலேயோ கடன் கொடுத்தவர்கட்கு உண்டாகும் நஷ்டத்தை அரசாங்கத்தார் பெரிது பண்ணவில்லை. ஆனால், சில இடங்களில் அம்மாதிரி உண்டான நஷ்டம், அரசாங்க நிதியிலிருந்து ஈடு செய்யப்பட்டிருக்கிறது.

**(2) விலை வாசியை ஏற்றல்:** எந்த அரசாங்கமும் தன் அரசாங்க எல்லைக்குள்ளே, காகித நாணய அளவையும், பாங்கி முதலியவை கொடுக்கும் கடன் அளவையும் அதிகப்படுத்தி, பண்டங்களின் விலை உயரும்படி செய்யலாம்.

அப்படிப்பட்ட விலை உயர்ச்சி இயற்கையில் உண்டாவதன்று ; அரசாங்கத்தின் காரியத்தால் செயற்கையில் ஏற்படுவது. இந்த முறை சில நாடுகளிலேதான் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(3) **விவசாய முறைகளில் மாறுதல் செய்தல்:** சில தேசங்களில் விலை வீழ்ச்சி உண்டானதால், விளை பொருள்களின் உற்பத்தி முறைகளில் விசேஷ மாறுபாடுகள் செய்வதன் மூலம் அவைகளின் விலையையும் குறைப்பதென்ற முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. பண்ட விற்பனை முறைகளிலும் பலவேறு மாறுபாடுகள் செய்யப்படுகின்றன. அரசாங்கமும் பெரிதும் உதவி செய்கிறது.

எனவே, அந்நிய நாடுகளில் பல வழிகளாலும் விவசாயிகளின் கடன் தொல்லை நாசமாக்கப்படுகிறது. அந்த வழிகளுள் மிக முக்கியமானது, கடன் பாக்கி வட்டிப் பாக்கிகளை ஒழிப்பதென்பது. அந்த நாடுகளெல்லாம் சுயேச்சை பெற்றவை. ஆகையால், வேண்டுவனவற்றை வேண்டியபோது அவைகள் செய்யும் ஆற்றல் பெற்று அந்நாடுகள் செம்மாந்து நிற்கின்றன. அவ்வளவு செய்வதென்பது நம் நாட்டில் முடியாத காரியம். எனினும், கடன் பாக்கி, வட்டி பாக்கிகளை மிகவும் பயன் உள்ள முறையில், மிகவும் துணிச்சலோடு, நம் நாட்டு மாகாண அரசாங்கங்கள் குறைக்கு

மானல், அவை நாட்டிற்குப் பெரிய சேவை செய்தவையாகும். நாடு நலம் பெறும்.

> "திண்ணங் காணீர்! பச்சை
> வண்ணன் பாதத் தாணை;
> எண்ணங் கெடுதல் வேண்டா!
> திண்ணம், விடுதலை திண்ணம்."

—பாரதியார்

## இந்நூலாசிரியர் எழுதிய வேறு நூல்கள்:

---

### 1. கிராமச் சீர்திருத்தம்

கனம். சுப்பராயன் அவர்களின் முன்னுரை, அநேக அழகிய படங்கள் இவைகளுடன் கூடியது. பல அரிய விஷயங்களைக் கொண்டது.

### 2. இந்திய விவசாயிகளின் கடன்

சிறந்த பொருளாதார ஆராச்சி நூல். கனம் S. ராமநாதனவர்களின் முன்னுரையுடன் கூடியது. விவசாயிகளின் கடன் காரணங்கள், தன்மை, கடன் பளு அதிகமான விதம் முதலிய விஷயங்களைப் புள்ளி விவரங்களுடன் காட்டுவது. அனைவரும் படிக்க வேண்டுவது.

PRINTED AT THE LIBERTY PRESS, G.T., MADRAS.